# திராவிடநாடு

[illegible]-2-60 | வார வெளியீடு | விலை 16 காசு


## வென்றிடுவோம் வெண்ணிலாவே!


—[ புலவர். கோ. வானவரம்பன் ]—


விண்ணறிய வருகின்ற வெண்ணிலாவே நீயும்
விண்ணதிரச் சிரிப்பதென்ன வெண்ணிலாவே?
கண்ணறிய வைத்திருந்தோம் வெண்ணிலாவே; அந்தக்
கரும்புமொழி தேய்வதற்கோ வெண்ணிலாவே
மண்ணறிய முதல்வர்யாம் வெண்ணிலாவே; இன்று
மரத்துப்போய் வாழ்வதற்கோ வெண்ணிலாவே?
எண்ணரிய வாழ்வுந்தான் வெண்ணிலாவே இந்நாள்
எண்ணுமல் வீழ்வதற்கோ வெண்ணிலாவே?

வீடுவிட்டுப் புறப்படுநல் வெண்ணிலாவே நீதான்
விலாவிரியச் சிரிப்பதென்னே வெண்ணிலாவே?
பாடுபட்டுச் சிறந்தஇனம் வெண்ணிலாவே, இன்று
பாடழிந்து வாழ்வதற்கோ வெண்ணிலாவே?
நாடுகட்டி ஆண்டஇனம் வெண்ணிலாவே, இன்று
நாடற்றுத் திரிவதற்கோ வெண்ணிலாவே?
ஏடுகட்டி வாழ்ந்தஇனம் வெண்ணிலாவே, அந்த
ஏடுகடல் கொண்டதற்கோ வெண்ணிலாவே?

கொடிகட்டி ஆண்டிருந்தோம் வெண்ணிலாவே அந்தக்
குடியாட்சி போனதற்கோ வெண்ணிலாவே?
பிடிபட்ட நாடுபல வெண்ணிலாவே இன்று
பிடியிழந்து போனதற்கோ வெண்ணிலாவே?
அடிபட்ட வடவர்தான் வெண்ணிலாவே எம்மை
அடிப்படுத்தி ஆள்வதற்கோ வெண்ணிலாவே?
குடிகெட்டு விடவில்லை வெண்ணிலாவே மீண்டும்
கொடிகட்டி ஆண்டிடுவோம் வெண்ணிலாவே!

கடல்ஏறி வருகின்ற வெண்ணிலாவே நீதான்
கைகொட்டிச் சிரிப்பதென்னே வெண்ணிலாவே?
கடல்ஏறி ஆண்டஇனம் வெண்ணிலாவே, இன்று
கடையினமாய் ஆனதற்கோ வெண்ணிலாவே?
அடல்ஏறு கொன்றவர்கள் வெண்ணிலாவே இன்று
அடிமைகளாய் வாழ்வதற்கோ வெண்ணிலாவே
விடல்ஏறு—வெற்றிதான் வெண்ணிலாவே மீண்டும்
வென்றிடுவோம் வென்றிடுவோம் வெண்ணிலாவே!

# ‘அறிவுரையாளர்!’

[ மா. கி. தசரதன் ]

மிகவும் சுலபமாகச் செய்யக்கூடியது ஏதாவது இருக்கிறதா? உடனே விடை சொல்லிவிடலாம் என்று தோன்றும். ஆனால் இதற்கு அவ்வளவு சுலபமாக விடை சொல்லிவிட இயலாது! எதை எண்ணினாலும், அதிலே ஓரளவுக்குச் “சிரமம்” இருப்பது தெரியும். உண்ணுவது—உறங்குவதுகூடச் சுலபமாகச் செய்யக் கூடிய வேலைகள் அல்ல. வாழைப் பழத்தை உரித்துத் தின்னச் சோம்பியவன் ‘உரித்த பழமாக எந்தக் கடையில் கிடைக்கும்’ என்று தேடியலைந்த கதையை நாம் அறிவோம்!

ஆனால், ஒரே ஒரு வேலை இருக்கிறது—அதற்கு முயற்சி ஒன்றும் தேவையில்லை; முதல் ஒன்றும் தேவையில்லை; இவ்வளவுதான் செய்யலாம் என்ற அளவு ஒன்றும் இல்லை. அது என்ன வேலை? வேறு ஒன்றுமில்லை — அறிவுரை சொல்வதுதான்! “இப்படி நட, இதைச் செய், அது கெடுதல்” என்று ஏதாவது ஒன்றைச் சொல்லிக்கொண்டேயிருக்கலாம். கேட்பதற்கு ஆள்மட்டும் கிடைத்துவிட்டால் போதும்—நாள் முழுவதும் இதே வேலையாக இருக்கலாம். இதிலே காசு பணம் ஒன்றும் செலவு இல்லை. இன்னொரு நன்மையும் இருக்கிறது. அதாவது, சொல்கிற அறிவுரையின்படி நடந்து, நன்மை ஏற்படுமானால் ‘மதிப்பு உயருகின்றது. தப்பாகிப் போனால் இழப்பு’ அறிவுரை சொல்பவருக்கு இல்லை; அறிவுரை கேட்டவர்க்குத்தான்! ஆக இது நிரம்பும் பாதுகாப்பான வேலையுமாகிறது!

ஆகையினால்தான் அறிவுரை சொல்கிறவர்களை நாம் எங்கும் காண்கிறோம். வீடு, வாயில்‘ தெரு, கடை, இரயில், பொது இடம் எங்கும் இந்த “அறிவுரையாளர்”கள் நீக்கமற நிறைந்திருக்கின்றனர். வீட்டுக்கு ஒட்டடை அடிப்பது சுண்ணாம்பு பூசுவது, இவைகளைப் பற்றி இப்படிச் செய், அப்படிச் செய் என்று என்றோ ஒருநாள் வந்து பார்க்கின்றவர் தனது ஆவலை அறிவுரையாக்கி நமக்கு அளித்துவிட்டுப் போய்விடுகிறார். கடையில் ஏதாவது ஒரு பொருளை எடுத்து ஆவலோடு பார்க்கிறோம். வாங்கலாமா வேண்டாமா என்று எண்ணுகின்றோம். அந்த நேரத்தில் இந்த ‘அறிவுரையாளர்’ எங்கிருந்தோ வருகின்றார். நாம் கையில் எடுத்து வைத்திருக்கும் பொருளின் படைப்பு முதல் அது பழுதுற்றால் செப்பனிடும் வழி வரை தனக்குத் தெரிந்த தகவல்களை, அல்லது தெரிந்ததாகத் தான் எண்ணியிருக்கும் செய்திகளை—அவை உண்மையா அல்லவா என்பதைப்பற்றி அணுவளவும் கவலைப்படாமல், எடுத்து விளக்குகின்றார். அவருடைய திறமையைக் கண்டு நாம் வியக்கிறோம்!

எந்த இரயில் நிலையத்தில் சிற்றுண்டி சிறப்பாக இருக்கும், காப்பி எங்கே ‘தர’மாகக் கிடைக்கும், என்பதும்—எந்த நிலையத்தில் எவ்வளவு நேரம் நிற்கும்—யார் யார் அந்த வண்டியில் எங்கெங்கு செல்லுகின்றனர் என்பதெல்லாம் தெரிந்த இரயில் ‘அறிவுரையாளரை’ நாம் அடிக்கடி காணுகின்றோம். அவர் சொல்வது நம்முடைய நன்மைக்குத்தான் என்பது அவருடைய தீர்ந்த எண்ணம்.

இவர்களைவிட்டு ஒதுங்க முடியுமா என்றால், முடியாது என்றுதான் சொல்லவேண்டும். நாம் அழைக்காவிட்டாலும் இவர்கள் “நான் இருக்கப் பயம் ஏன்?” என்று முன்வந்து நிற்கின்றனர், எதையேனும் சொல்கின்றனர், நாம் அந்த அறிவுரையைக் கேட்காமல் விட்டால் ‘ஆகட்டும்’ என்று மனத்தில் கருவிக்கொண்டே செல்கிறார்கள். நாம் எங்காவது இடறி விழுந்தால் அங்கே நாம் எழுவதற்கு முன் வந்து நின்று “நான்தான் அப்போதே சொன்னேனே, கேட்டாயா?” என்கிறார்கள். நம்மிடம் கேட்டதோடு விடாமல், தாம் காணுகின்ற ஒவ்வொருவரிடமும் “நான் சொன்னேன் அவன் கேட்கவில்லை, இப்போது படுகிறான், என்ன செய்வது?” என்று அனுதாபப்படுகின்றார்கள். இல்லை, அனுதாபப்படுவதுபோல் நடித்து அச்சுறுத்துகின்றார்கள். “அவன் கேட்கவில்லை, அதனால் அப்படியானான்—நீயாவது நான் சொல்வதைக் கேள் — இல்லாவிடின்...” என்று அவர்கள் சொல்வதில்லையே தவிர அவர்களுடைய சொல்லும், அந்தச் சொல்லின் பொருளும் அதைத்தான் உணர்த்துகின்றன. “அப்படியே, அப்படியே” என்று தலையை ஆட்டுவதுதான் அவர்களிடமிருந்து தப்புவதற்கான ஒரே வழி.

இன்ன துறையைப்பற்றித்தான் அறிவுரை சொல்லவேண்டும் என்ற நியதியும் இந்த அறிவுரையாளருக்கு இல்லை. அவருக்குத் தெரியாதது ஏதாவது இருந்தால் தானே அவர் அதை விட்டுவிட்டு வேறு துறைகளில் அறிவுரை வழங்குவதற்கு? உலகில் உள்ள எல்லாப் பொருளும் அவருக்குத் தெரியும் — எல்லோரையும்விட மிகுதியாகத் தெரியும். தனக்குத் தெரிந்த ‘அரிய’ செய்திகளைத் தனக்குள்ளேயே மட்டும் வைத்துப் பாழாக்கிவிடாமல், ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்ற உயர்ந்த எண்ணத்தினால் உந்தப்பட்டுத்தான் அவர் எல்லாருக்கும் அறிவுரை வழங்குகின்றார்.

“அறிவுரையைப் பிறருக்கு வழங்குவதுபோல் தனக்கும் வழங்கிக் கொள்வாரா?” என்றால் நிச்சயமாகச் சொல்ல இயலாது. வழங்கிக் கொள்வாரோ என்னவோ—தான் அப்படி நடப்பாரா என்றால் இல்லை நடக்கமாட்டார் என்பதை மட்டும் உறுதியாகக் கூறலாம். ‘ஊருக்கு எல்லாம் உபதேசிக்கின்றீர்களே...’ என்று அவரிடம்

(4-ம் பக்கம் பார்க்க)

# காரணம் என்ன?

18 ஆண்டுச் சந்தா ரூ. 8. (28-2-60) தனிப் பிரதி 16-காசு இதழ் 33

"சட்டத்தை மீறுவோர் தண்டிக்கப்படுவர்" என்பது சட்டத்துறையிலுள்ள ஒரு பொதுவான கட்டளையாகும். தண்டனை என்பது பலவகைப்படும். கடுந்தண்டனை; சாதாரண தண்டனை; அபராதம்; சிறை; கோர்ட் கலையும்வரை சிறை, அதாவது கோர்ட் நடவடிக்கைகள் முடியும்வரை ஓரிரு போலீ சார் பக்கத்தில் நிற்கக் கோர்ட்டிலேயே இருந்து விட்டுப் போதல்; வீட்டுக்குள் சிறை, அதாவது, தன் வீட்டைவிட்டு வெளியே போகாமல் இருப்பது; ஊரை விட்டுப் போகாமல் இருப்பது; நாட்டைவிட்டுப் போகாமல் இருப்பது; நாடு கடத்தப்படுவது; அன்றாடம் போலீஸ் நிலையத்துக்குச் சென்று கையொப்பமிட்டு வருவது; சிறையும் அபராதமும் சேர்ந்த தண்டனை; அபராதம், கட்ட மறுத்தால் சிறை; ஆயுட் காலம்வரை சிறை; மரண தண்டனை; ஒரு ஊரில் வசிப்பவர்கள் அத்தனைபேருமே அபராதம் கட்ட வேண்டுமென்ற ஒரு தண்டனை—அதாவது சட்டத்துக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஒரு ஊரில் இருப்பவர்களில் முக்கியமானவர்களோ அல்லது பெரும்பாலாரோ ஈடுபடுவராயின், அரசாங்கம் அந்த ஊரில் இருப்பவர்கள் அனைவருமே அபராதம் செலுத்தவேண்டுமென்று தண்டனை விதித்தல்; என்று இப்படித் தண்டனை பலதிறப்படும்.

வரதட்சிணை ஒழிப்பு மசோதா டில்லி பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட போது, அதனை மீறுவோருக்கு அபராதம், சிறை அல்லது இரண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பின்னர் தீர்மானம் கீழ் சபையில் இருந்து மேல் சபைக்குப் போயிற்று. அங்கு, தீர்மானத்திலுள்ள சில பகுதிகள் மேல் சபையினரால் ஒப்புக்கொள்ளப் படாது போகவே, அது, மீண்டும் கீழ்சபைக்கு வந்துளது. இனி, அது எந்த நிலையை அடையுமென்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய ஒன்றாகும்.

வரதட்சிணை ஒழிப்பு மசோதா விவாதத்திற்கு வந்தபோது சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் அதில் கலந்துகொண்டு தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர்.

அவர்களில் மகாவீர் தியாகி என்பவர் வெளியிட்ட கருத்து வேடிக்கையாக உள்ளது.

"எனக்குப் பிள்ளையோ இல்லை. இருப்பதெல்லாம் மூன்று பெண்கள்தான். என் சொத்துக்களை அவர்களுக்குத் தரவில்லை என்றால், வேறு யாருக்குக் கொடுப்பது? மந்திரிகளுக்குக் கொடுப்பதா? என் பெண்களுக்கு என் சொத்தை நான் கொடுக்கிறேன். அதைத் தடை செய்வானேன்?"

இது பாராளுமன்ற உறுப்பினராக விளங்கும் மகாவீர் தியாகி 23—2—60ல் வெளியிட்ட கருத்தாகும்.

வரதட்சிணைக்கும் சொத்துப் பிரிவினைக்கும் என்ன சம்பந்தம் என்பதனைக்கூட எண்ணிப்பார்க்காமல் இவ்விதம் பேசியிருப்பது வேடிக்கையாகவே உள்ளது.

ஒருவருக்குச் சொத்து இருந்தால், அது, அவருடைய பிள்ளைகள் எல்லாருக்குமே உரித்தானது என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அதாவது, ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சொத்தில் உரிமையும் பங்கும் உண்டு என்பது அந்தச் சட்டத்தின் கட்டளையாகும். ஒருவருக்கு ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் இருப்பார்களானால், அவர்கள் அனைவருக்குமே தந்தையின் சொத்தில் பங்கும் உரிமையும் உண்டு.

இதனைக்கூட அறிந்துகொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் தோழர் மகாவீர் என்பார்.

எனக்கு ஆண் பிள்ளைகளே இல்லையே! பெண்கள்தானே இருக்கின்றனர்! என் சொத்தை என் பெண்களுக்குத் தராமல் வேறு யாருக்குத் தருவது? மந்திரிகளுக்குத் தந்துவிடுவதா? என்று பெரிதும் அங்கலாய்த்துப் பேசித் தமது "அற்புத ஆய்வுரை"யை வெளியிட்டிருக்கிறார்.

தன்னுடைய பெண்களுக்குத் தன்னிடமிருக்கும் சொத்தைத் தரக்கூடாதென்று யாரோ தடை விதித்தது போலவும், தாமுடைய சொத்தை என்ன செய்வது என்று தெரியாது தத்தளித்துப்போய், இனி என் செய்வேன்? என் சொத்தை யாருக்கு வழங்குவேன்? என்ற இரங்கத் தக்க நிலைக்கு ஆளானது போலவும் ஆகிப் பேசியிருக்கிறார்.

தம்முடைய சொத்தைத் தம் பெண்களுக்குக் கொடுக்கும் உரிமையை யாரும் தட்டிப் பறித்துக் கொள்ளமாட்டார்கள்—தட்டிப் பறித்துக்கொள்ளவும் முடியாது. அதற்குச் சட்டமும் இடந்தராது.

"பெண்களுக்கும் சொத்தில் பங்கு உண்டு" என்பது ஏற்கெனவே சட்டமாக்கப்பட்டிருக்கிறது. இதனை

மகாவீர் தியாகி அறியாது பேசினுர் என்று கொள்வதா? அல்லது வரதட்சிணை ஒழிப்பில் அவருக்கு ஏற்பட்ட அடங்காத ஆத்திரத்தால் இப்படிப் பேசினுர் என்று கொள்வதா?

முன்னதை உண்மையென்று கொள்ளமுடியாது. காரணம், பெண்களுக்கும் சொத்தில் உரிமையுண்டு என்பது சட்டபூர்வமான ஒன்று என்பதை அறியாத ஒருவர்கூடச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிருரே என்ற கேலிக்கு அவர் ஆளாக விரும்புவாரா? ஒரு போதும் விரும்பார். எனவே, வரதட்சிணை என்று கருதும் விபரீத புரியினரில் அவரும் ஒருவர் என்பதைக் காட்டிக்கொள்ளவே அவர் பெரிதும் பாடுபட்டிருக்கிருர் என்பதுதான் உண்மையாகும். போகட்டும். தம்முடைய சொத்துக்களை எல்லாம் தமது பெண்களுக்கு வரதட்சிணையாக வழங்கலாமென்று முடிவு செய்திருந்தார் போலும்! அதுமுடியாதென்ற நிலையை இந்த வரதட்சிணை ஒழிப்பு மசோதா உண்டாக்கி விடவே, அவர் அடைந்த ஆத்திரத்தால் அள்ளி வீசியிருக்கிருர் இந்த அபாரமான ஆராய்ச்சியை!

வரதட்சிணை ஒழிப்பை விரும்பாதவர்களில் நானும் ஒருவன் என்று நேரடியாகக் கூறுவதற்குப் பதில் சுற்றிவளைத்து ஏதேதோ பேசத் தம்முடைய 'கெட்டிக்கார'த்தனத்தைக் காட்டியிருக்கிருர்.

இதனை ஏன் எழுதுகிருேமென்ருல், நாட்டுக்கு ஒரு நல்ல செயல் செய்யப்படும்போது, அதற்கு முட்டுக் கட்டை போட்டு, அதனை எப்படியாவது உருவாகாது தடுக்க சிலர் இருக்கிருர்களே என்பதனை எடுத்துக்காட்டவும், சட்டத்தை உருவாக்குபவர்கட்கே சட்டமென்ருல் என்ன என்பது தெரியாத பரிதாபத்திற்குரிய நிலையில் இருக்கிருர்களே என்பதை எடுத்துக்காட்டவுமேயாகும்.

வரதட்சிணை ஒழிப்புச் சட்டத்தை மீறுவோருக்கு அபராதம், சிறை அல்லது இரண்டும் என்பதன்பேரில் 'தான் மேல் சபைக்குச் சென்ற இந்தத் தீர்மான பலமான விவாதங்களுக்குப் பின்னர் திரும்பவும் சபைக்கு வந்திருக்கிறதென்று கருதுகிருேம்.

ஒரு குற்றம் சாதாரணமானதாக இருந்தா அதற்குச் சிறை அல்லது அபராதம் என்ற இரண்டி ஒன்றை விதிப்பார் நீதிபதி. குற்றம் கடுமையானதா இருந்தால், அபராதத்தோடு சிறையும் என்று இர டையும் விதிப்பார். கடுமை என்ற சொல்லுக் அடங்காத—மனிதப் பண்புக்கு அப்பாற்பட்ட குற் மென்ருல் ஆயுட் சிறை அல்லது மரண தண்ட என்ற இரண்டில் ஒன்று கையாளப்படும்.

வரதட்சிணையைப் பொறுத்தமட்டில் இ 'கடுமை' என்ற சொல்லோடு 'கொடுமை'யும் சே திருப்பதாலோ என்னவோ, இக்குற்றத்திற்கு அப தம், சிறை அல்லது இரண்டும் என்ற முடிவு செய்தா கள் என்று கருதுகிருேம்.

ஆனல், இது சிலருக்குப் பிடிக்கவில்லை. வரத சிணை கேட்டால்—கொடுத்தால் சிறையாம், அபா மாம், இது அடுக்குமா, ஆகுமா என்றெல்லாம்பே யதன் விளைவுதான்போலும் தீர்மானம் திரும்பவு வந்திருக்கிறது. காரணம் எதுவாக இருப்பினு சட்டத்தை மீறுவது குற்றம். அதற்குத் தண்ட தருவது முறை என்பதை இங்கு குறிப்பிட விரும் கிருேம். தண்டனையின் அளவு குற்றத்தின் தரத்தை பொறுத்து நீதிமன்றம் வழங்கும் முடிவாகும். குற் தின் தரத்தைக் கணிக்கும் பொறுப்புச் சட்டமன்ற தின் கையில் உள்ளது. சட்டமன்றம் எடுக்கும் நல் முடிவை எதிர்த்துப் பேசும் சட்ட மன்ற உறுப்பின களின் போக்கு மிகவும் பரிதாபத்திற்குரியதாகும்.

★

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

மெல்லக் கேட்டால், அப்போது தொண்டையைக் கனைத்துக் கொண்டு 'நான் சொல்வதுபோல் நட; ஆனல் நான் நடப்பதைப் போல் நீ நடக்காதே' என்று தனி அறிவுரை ஒன்றைச் சொல்வார்.

இந்த வகையினரை ஒழித்து விடவும்; ஒதுக்கிவிடவும் இயலாது. ஏனெனில் இவர்கள் சொல்வதினல் பலன் இருக்கிறதோ இல்லையோ—அவர்கள் சொல்லும் அறிவுரைகளைக் கேட்கும்போது சுவை இருக்கிறது. அந்தச் சுவை வாழ்க்கைக்கு மிகவும் தேவைப்படுகிறது. அது இன்றேல் வாழ்க்கை 'சப்'பென்றுதான் இருக்கும்.

இதிலே சிலர் கொஞ்சம் வியாபார முறை தெரிந்தவர்கள். அவர்கள் எளிதில் அறிவுரை வழங்கி விடமாட்டார்கள். ஒன்றுக்கு இரண்டுமுறை — கேட்டால், இல்லாத 'பிகு' எல்லாம் செய்வார்கள். பிறகு மெல்ல, மனம் இரங்கி, "சரி, நீ இவ்வளவுதூரம் கேட்கிருயே—சொல்லாவிட்டால் விடவா போகிருய்? உனக்குச் சொல்லாமல் வேறுயாருக்குச் சொல்ல இருக்கிறேன். ஆனல் நான் சொன்னல் நீ கேட்பாயோ, மாட்டாயோ? கேட்பதானல் சொல்கிறேன்" என்று முன்னுரை ஒன்று அமைத்துக்கொண்டுதான் தொடங்குவார்கள். கேட்டபின் தருவதுதான் சிறப்பு என்ற வியாபார நோக்கம் உணர்ந்தவர்கள் இவர்கள்.

எல்லாவகை அறிவுரையாளர்களுக்கும் ஒரு பண்பு பொதுவாக அமைந்திருக்கிறது. அவர்கள் அறிவுரை வழங்கும்போது நாம் குறுக்கே பேசக்கூடாது — மறுத்துப்பேசக்கூடாது. அப்படியாரா வது குறுக்கிட்டு மறுத்தால் அவ களுக்குக் கோபமும் வரும் சலி பும் வரும். "என்னவோ எனக்கு தெரிந்ததைச் சொன்னேன்— பிறகு உங்கள் விருப்பம்" என் ஒதுங்கினலும் ஒதுங்குவார்கள் 'உனக்கு என்ன ஐயா, 'தெரியு நீ குழந்தை—நான் சொல்கிறேன் கேள்—இருபது ஆண்டுகளுக் முன்......' என்று பாய்ந்தாலு பாய்வார்கள். எதைச் சொல்வா கள், என்ன செய்வார்கள் என்பது நிச்சயமாகச் சொல்ல இயலாது.

ஆனல், அந்த அறிவுரைகளை கேட்காது விட்டாலும் விடலாம் இந்தக் கட்டுரையை இன்னும் இழுக்காதே என்று என் மன சொல்கிற அறிவுரையைக் கட்ட யம் கேட்டுத்தானே ஆ வேண்டும்?

★

# மாவீரன் மண்டியிட்டான்

சாந்தா

அரியணை ஏறியதும் அடலேறு அலக்ஸாண்டரை அண்டை நாடுகள் அச்சமூட்டின. பக்கத்து நகரங்கள் தங்கள் பலம் காட்டின. குமுறும் மலையெனக், கொந்தளிக்கும் கடலெனக் கொப்பளித்தான் கோபத்தை. சிந்தித்துச் செயல் புரியும் அவனது உள்ளத்தில் சினம் பிறிட்டால்...!, எதிர்ப்பட்ட எத்தகைய சக்திகளும் கல் எறிபட்ட கண்ணாடிதான். அத்தனை மனவலிமை கொண்டவன் அவன்.

"அழகு மொழியும் அமுத விழியும் கொண்டவள் கிளியோபத்ரா. அவளைத் தன் தந்தை பிலிப் மன்னன் மணம் முடித்ததால் ஏற்பட்ட சினம் தன் உயிருக்கே உலை வைத்தது. ஆனால் மாஸிடோனிய மக்களின் நற்பயன் அலக்ஸாண்டரை நாடு கடத்தியது. அத்தகைய நெஞ்சுரம் கொண்டவன் எப்படிப் பக்கத்தவர்களின் பகைமை மொழிகளைப் பொறுப்பான்? குற்றுயிரும் குருதியும் அல்லவா பெருக்கெடுக்கும்! இந்த நிலையைத் தடுத்து நிறுத்தி அமைதியான முறையில் தீர்வுகாணச் செய்யவேண்டும். மறுத்தால் அலக்ஸாண்டர் வாள் எடுத்துச் சூளுரைக்காமல் மாற்று வகைகளைக் கையாளச் செய்யவேண்டும், என்ற நல்லதொரு கருத்தை அறிவிக்க அலக்ஸாண்டர் முன் சென்றனர் அவனது ஆலோசகர்கள். ஆனால் அவன் "அனைத்தையும் ஒழுங்குபடுத்த ஒரே வழிதான் உண்டு. அதுதான் வீரமும், தகைமையும் கொண்டு செயல்படுவது, வாள் வீச்சு என் கௌரவத்தையும், கண்ணியத்தையும் களங்கப்படுத்தும். வாள் வீச்சு அவைகளைக் காப்பதன்றி, எள்ளி நகைபுரியக் காத்து நிற்கும் இந்த அகிலத்தை என் காலடியில் கட்டிச் சேர்க்கும்." என்றபதிலை அள்ளி இறைத்துவிட்டு, மார்புக் கவசத்தைச் சரி செய்தபடியே எதிரே இருந்த ஈட்டியைக் கவனித்தான் அலக்ஸாண்டர். ஏதென்ஸ் நகரப் புரட்சியை அடக்கியதற்காக அவன் தந்தையால் அளிக்கப்பட்ட அன்புப் பரிசு அது. அதில் தோய்ந்து கருகிப் போயிருந்த இரத்தத்தைத் துடைத்துவிட்டுத் தைலமிட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் நண்பன் ஆண்டிபேட்டர் அவசரமாகத் தன்னை நோக்கி வருவதை வியப்போடு பார்த்தான் அலக்ஸாண்டர்.

"ஆண்டிபேட்டர்! கலவர உள்ளம்—கடுகடுத்த முகம் — அவசர நடை இத்தனைக்கும் காரணம் நீ சென்றமுயற்சி தோல்வி, அப்படித்தானே!"

"ஆமாம் அலக்ஸாண்டர். ஆனால் அதுவே நம் வெற்றிக்கு முதற்படி. மேலும் நாம் எடுக்கப்போகும் நடவடிக்கைகளுக்கு யாரும் களங்கம் கற்பிக்க முடியாதல்லவா!"

"கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன நொண்டிச் சமாதானம். தோல்வி என்ற வார்த்தையால் இந்த மாஸிடோனியாவிற்கே மாசு கற்பித்துவிட்டாய்! தீப் மக்கள் அத்தனை சாதுரியம் நிறைந்தவர்களா, நீ தோல்வியுற!"

"அலக்ஸாண்டர்! நீ வியப்புறுவதுபோல அவர்கள்விவேகிகளும் அல்லர்! நான் வீணனும் அல்ல! உயிரற்ற உடல்களின் மேல் உடன்பாடு அடைவதைக் காட்டிலும், நட்புறவால் அதைப் பெறுவது எத்தனையோ வகைகளில் பெரும் பயன் உண்டு என எண்ணினேன். ஆனால்..."

"ஆனால்...... ஏமாந்தாய்... புறமுதுகு காட்டிவிட்டாய். இல்லை, ஆண்டிபேட்டர்!"

"அப்படி அல்ல! முதலில் கிளர்ச்சிக்காரர்களின் தலைவர்களான போனிக்ஸையும், பிரோகிடிஸையும் காண விரைந்தேன். என்னை யார் என்று அறியாத தீப் மக்களில் சிலர், அலக்ஸாண்டரின் நண்பர்களான பிளேடையும், ஆண்டிபேட்டரையும் ஒப்படைத்தால் அவர்களை ஈடுகாட்டி எங்கள் தலைவர்களைச் சந்திக்க அநுமதிப்போம் என்றார்கள். மறுத்துரைத்தேன்— வேண்டுவன எடுத்துரைத்தேன்— ஏற்கவில்லை அவர்கள்! 'அப்படியானால் மாஸிடோனியாவின் பிடிப்பு நமக்கு வேண்டாம், அலக்ஸாண்டரின் அதிகார வரம்பை உடைத்தெறியுங்கள்! பேரிகை முழங்கட்டும்! வாளும்தோளும் துடிக்கட்டும்! ஈட்டியும் கேடயமும் ஒலிக்கட்டும்! மாஸிடோனிய மண்ணில் இருந்து தீப் பூமி விடுபடட்டும்! என்ற உரிமைக்குரலை எழுப்பிவிட்டனர். தீப் மக்கள் மூட்டிய விடுதலைத் தீ பக்கத்து நகரங்களுக்கும் பரவத் தொடங்கிவிட்டது. ஆகவேதான் சிந்தித்துப் பயனில்லை, செயல்பட வேண்டும் என்று ஓடோடி வந்தேன்" என்று கூறினான் ஆண்டிபேட்டர். இதைக்கேட்ட அலக்ஸாண்டரின் முகம் சிவந்தது. கண்களிலே பொறி பறந்தது.

''ஆ......! அலக்ஸாண்டர் சிறுவன்! அரசியல் அறிவு அற்றவன் என்ற ஆணவமா! என் முன்னோர்கள் செய்துமுடிக்காத செயலைச் செய்துகாட்டுகிறேன்! உரிமைக் குரலை முளையிலே கிள்ளி எறிந்துவிட்டு இந்த உலகையே என் சுட்டு விரலுக்குப் பணியவைக்கிறேன்! ஆணவக்காரர்கள் — அற்பாசை படைத்தவர்கள்! இவர்களை ஆலைபட்ட கரும்பெனக் கசக்கிப் பிழியுங்கள்! ஏன் பேசாதிருக்கிறீர்கள்? மின்னும் வாளையும் துணைக்குவரும் கேடயத்தையும் பூணுங்கள்! தீப் மக்களின் திமிர்பிடித்த நரம்பை யாழ் அமைத்து, கதறிக் கதறி விழும் கபால ஓடுகளை மத்தளமாக்கி, சூலும் வேலும் கூட்டும் ஒலியை ஜலங்கையாக்கி, சிரித்துச் சிரித்து மகிழும்பொழுது சிங்கார ஒளிவீசும் பற்களை மாலையாகச் சூட்டி, ஓலமிட்டு ஓடும் பெண்களின் சோகக்குரலை இன்னிசையாக்கி, அதை ஆனந்தத்தோடு சுவைக்க அவர்களின் மாமிசத்தை விருந்தாக்கி, அவர்களின் உடலிலே சிவக்கச் சிவக்க ஓடும் இரத்தத்தை மதுவாக அருந்தப் புறப்படுங்கள்! தாமதமாகாது, புறப்படுங்கள்!'' என இடிமுழக்கமிட்டான் அலக்ஸாண்டர்.

போர்! போர்!! எனக் கேட்ட படைகள் பறந்தன! பரிகளின் கால்கள் முறிந்தன! கரிகளின் கொம்புகள் தெறித்தன! பகைவர்களின் நெஞ்சங்கள் பிளந்தன! மண்டை ஓடுகள் சிதறின! குருதிகள் சிந்தின! உடல்கள் கோபுரமென உயர்ந்தன! இவைகளைக் கண்டு ஆலவட்டம் போடும் கழுகுக் கூட்டம்—நகராமல் நக்கிச் சுவைக்கும் நரிக் கும்பல்-குற்றுயிர்களில் இருந்து தவழ்ந்து வரும் முனகல்— இவற்றிற்கிடையே மாஸிடோனிய வீரர்கள் வெற்றி விழாக் கொண்டாடிக் குதூகலமடைந்துகொண்டிருந்தார்கள். கையிலே மதுக்கிண்ணம் — கண்களிலே களிப்பு — நெஞ்சிலே பூரிப்பு! இத்தனையும் கொஞ்சப் படை வீரர்களின் பரவசத்தைப் பார்த்தான் அலக்சாண்டர். பாதியிலே ஏற்பட்ட பரபரப்பால் பார்வையைப் பக்கத்தில் சாய்த்தான்.

வெள்ளை உடை. வீசும் காற்றில் அலையும் தலைமயிர். கல் எறிபட்ட பால்மரம்போல் கசியும் கண்ணீர்! இன்பத்தின் பூரிப்பில் பொங்கவேண்டிய மலர் முகத்தில் ஏக்கத்தின் பரிதவிப்பு. வீறிட்டழும் இளங்குழந்தை, இத்தனையும் கூடிய தீமெக்லி கைதியாக நின்றுகொண்டிருந்தாள். என்ன குற்றம் செய்தாள்? எதற்காகச் சின்னஞ்சிறு குழந்தையுடன் சிறைபிடிக்கவேண்டும்? என்று கேட்காமலே அந்த எண்ணக் கீறல் அலக்சாண்டரின் முகத்தில் படிந்தது. அதனை உணர்ந்த ஆண்டிபேட்டர்:—

''உரிமை வெறிகொண்ட தீப் மக்கள் கூட்டத்தில் ஒரு பெண்ணை மட்டும் கைதியாகக்கொண்டு வந்திருக்கிறேன் என்று புண்படவேண்டாம் அலக்சாண்டர்! அழகு உடல்—ஆசை மொழி, இந்த இரண்டையும் கொண்ட சிலந்திப் பூச்சி. வஞ்சகம் கொண்டாள்—வலை விரித்தாள்! அதிலே சிக்குண்டான் — சித்தத்தைப் பறிகொடுத்தான் நமது தளபதி கிளாடிஸ். எனவே மாய்ந்தான். இல்லை...... இல்லை......இவள் மாய்த்துவிட்டாள்'' என்று கூறியபடி தலை கவிழ்ந்து நின்றான்.

இதைக் கேட்ட அலக்சாண்டர் குதிரைப் பிடரி போன்ற தலைக் கவசத்தை எடுத்து எதிரே உள்ள ஆசனத்தில் வைத்துவிட்டு, தீமெக்லியைச் சாவதானமாகப் பார்த்தபடி:—

''மாஸிடோனிய பெரு வீரனை ஒரு சாதாரண பெண் வீழ்த்திவிட்டாள்! வெட்கம்! வெட்கம்!! வெட்கம்மட்டுமல்ல, வேதனையும் நிறைந்தது'' என்றான்.

''அதைவிடத் துயரம் நிறைந்தது என் வரலாறு'' என்று கூறியபடியே இடத்தோளில் இருந்து தன் வலது தோளுக்குக் குழந்தையை மாற்றினாள் தீமெக்லி.

''நீ அடைந்த துயரமும், உன் நாட்டு மக்களின் துன்பமும் எனக்குத் தேவையில்லை. கையும் மெய்யுமாகப் பிடிபட்ட நீ என் முன் குற்றவாளி. அதிலும் கொலைக்குற்றம்! மன்னிக்கமுடியாத இராசத்துரோகக் குற்றம்! இதற்கு நீ என்ன சொல்லப்போகிறாய்?'' என்று கூறியபடி புருவத்தை நெறித்தான் அலக்சாண்டர்.

''கொல்ல வந்த புலியையும், கொத்தவந்த பாம்பையும் கொல்வது குற்றமா? உங்கள் சட்டப்படி இவைகள் குற்றம் என்றால் நான் கிளாடிசைக் கொன்றதும் குற்றம் தான்! அதை மறுக்கவில்லை''. என்றாள் தீமெக்லி.

கிரேக்க சாம்ராச்யத்தில் அலக்சாண்டர் முன் நின்று இதைப்போல யாரும் துணிந்து பேசவில்லை! ஆனால் தீமெக்லி பேசினாள். அவளது சொற்களிலே உண்மை பிரதிபலித்தது. என்றாலும், கோப உணர்ச்சியோடு கைகளைப் பிசைந்தான். இங்குமங்கும் நடைபோட்டான்.

''நான் அலக்சாண்டர்! என் காலடி கேட்டுக் கதறிய நாடுகள் கணக்கற்றவை. என் வாள் சுவைத்து வீசிய மனிதத் தலைகள் எண்ணற்றவை. இத்தனையும் தெரிந்தவள் நீ — தெரிந்தும் குற்றம் செய்திருக்கிறாய். இதற்கான தண்டனைகளை நீ அனுபவித்துத்தான் ஆகவேண்டும்'' என்று

## 'வாழும்' வடக்கு!

புதிய திருமணச் சட்டம் அமுலுக்கு வந்தபின் முன்னூற்று ஐம்பது மணமுறிவு வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த ''மணமுறிவு நாகரிகம்'' தென்னகத்தைவிட வடக்கில்தான் மிகுதியாக இருக்கிறது என்று புள்ளி விவரம் கூறுகிறது!

| | | |
|---|---|---|
| பஞ்சாப் | 112 | வழக்குகள் |
| மத்திய பிரதேசம் | 76 | ,, |
| மேற்கு வங்காளம் | 51 | ,, |
| பம்பாய் | 38 | ,, |
| உத்தரப்பிரதேசம் | 35 | ,, |
| இராசஸ்தான் | 10 | ,, |
| திரிபுரா | 10 | ,, |
| கேரளம் | 6 | ,, |
| சென்னை | 2 | ,, |
| மைசூர் | 5 | ,, |

மீதி வழக்குகள் இங்கும் அங்குமாக எழுந்துள்ளனவாம்! இதிலேகூட வடக்குத்தான் முன் நிற்கிறது!

கனலைப்போல் வார்த்தைகளை வீசினான்.

"மன்னவா! நீங்கள் பருவ உள்ளங் கொண்டவர். கண்டவர் காமுறும் கட்டழகு படைத்தவர். ஆனால் பருவ ஆசை என்னும் காட்டாற்றைக் கட்டுபடுத்திய மாவீரர். ஆகவேதான் நினைக்காதவைகளை நினைக்கிறீர்கள். நினைத்ததைச் சாதிக்கிறீர்கள். அதன் பலன்!? தீப் மக்களுக்கே உரித்தான இந்த மண்ணில், அவர்களின் குருதியைப்பாய்ச்சி, உரிமை உணர்ச்சி கொண்ட அவர்களின் தலைகளை விதைத்திருக்கிறீர்கள். பல உயிர்களைப் பறித்துத் தின்னும் பயங்கர சினம் உங்கள் உள்ளத்தில் குடிகொண்டு இருக்கும் பொழுது, என்னைப்போன்ற சுதந்திர வெறியர்கள் எப்படி வாழ முடியும்?"

என்றபடி தன் குழந்தையின் முகத்தை நோக்கினாள் திமெக்லி. அவளது வேதனை அறியா அக்குழந்தை, தன் பிஞ்சுக் கரங்களால் தாயின் முகத்தை அறைந்தபடி குறுநகை புரிந்தது. அவளது கண்களிலே நீர் பொலபொலவென உதிர்ந்தது. எத்தனையோ ஆயிரம் பெண்களின் கண்ணீர்த்துளிகள் அலக்சாண்டரின் உள்ளத்தை ஊமையாக்கின. ஏனோ திமெக்லியின் கண்ணீர் மட்டும் அவனை நிலைகுலையச்செய்து தலைகவிழச் செய்தது? வடியும் நீரைத்துடைக்காமல்குழந்தையைச் சாய்த்தபடி:—

"இந்த உரிமைப் போருக்காக வீறுகொண்ட இளைஞர் சமுதாயம் ஆயிரமாயிரம்! இன்ப நினைவுகளை இதயத்தில் இருந்து எடுத்துவிட்டு, மழலை மொழிச் செல்வங்களின் மதிமுகத்தை இந்த மண்ணுக்காக மறந்து, நாட்டைமீட்கும் நல்ல காரியத்திற்காகக் களம் புகுந்து மடியும்பொழுதும் நான் கவலைகொள்ளவில்லை! அடிமை வாழ்வை அகற்றச் சமர்புரிந்து சாக்காடு சென்ற என் கணவர் அன்புச் சகோதரர்களுக்காக நான் துடிதுடிக்கவும் இல்லை—கண்ணீர் சிந்தவும் இல்லை! காரணம், வீரம் அவர்களைத் தொட்டணைத்தது. மானம்குலையாமல் மரணம் அடைந்தார்கள்! ஆனால்... இதோ கிடக்கிறானே உயிரற்ற பிணமாக...இந்தக் கிளாடிஸ்......தங்களின் உயர்ந்த வீரன் — இவனை மாஸிடோனிய தளபதி என்று தெரியும். தெரிந்தும் கொன்றேன் — தெளிவான நெஞ்சத்தோடு. ஏன் கொன்றேன்? எதற்காகக் கொல்லவேண்டும்? என்பீர்கள்! உண்மை. கண்ணியக் குறைவாகப் பெண்களிடம் நடந்துகொள்ளும் ஒருவன் அலக்சாண்டரின் படைவீரனாக இருக்கிறானே என்பதற்காகக் கொன்றேன்...... என்று கூறிமுடிப்பதற்குள்:

"படையெடுப்பென்றால் பலவும் நிகழும். அதற்காகக்கொன்றேன் என்பது குற்றம்" என்றான் ஆண்டிபேட்டர்.

"ஆமாம்! அதையும் நான் அறிவேன். அறிந்த காரணத்திற்காகவே என் உடமைகளைக் கேட்டான் கிளாடிஸ். கொடுத்தேன். சேர்த்துவைத்த செல்வங்கள் அத்தனையும் வேண்டுமென்றான். மறுக்கவில்லை நான். தந்தது போதாது என்றான். தருவதற்கு என்ன இருக்கிறது என்றேன். அழகு உடல் இருக்கிறது. மது ததும்பும் பவள இதழ்கள் இருக்கின்றன. பற்றிப் படரவேண்டும் பச்சைக் கொடியே என்றான். இசையவில்லை நான். உருட்டும் விழிகளால் அதட்டினான். மிரண்டுவிடவில்லை. பதுங்கிய மானைப் பாயும் புலிபோல் பற்றினான். பதறினேன்! துடித்தேன்! துவண்டேன்! துவண்டநிலை அறிந்து பசித்த மட்டும் புசித்தான். விடுபட்ட என்னிடம் சீற்றம்கொண்டான். மனம் ஒப்பாத இச்சைக்கு மனம் குமுறினான். கொடுமைப்படுத்தினான். மீண்டும் செல்வம் இருப்பதுபோல் கேட்டான். ஏதும் கூறியும் பயனில்லை என்பதை உணர்ந்தேன். அந்த உணர்வு ஒரு நல்ல முடிவைத் தந்தது. துணிந்தேன். என்னைப்போன்ற பெண்கள் மானத்தை இழந்ததுபோதும், இனி இருக்கும் பெண்களின் மானமாவது காக்கப்படட்டும். இத்தகைய கொடிய செயலுக்கு அவலசாவுதான் பரிசு என்பதை ஏதென்ஸில் வாழும் கிளாடிஸ் போன்றவர்கள் உணரட்டும் என்று எழுந்தேன். என் செல்வங்கள் யாவும் தோட்டத்துக்கிணற்றில் மறைத்து வைத்திருப்பதாகக்கூறி அழைத்தேன். பலிபீடத்துக்குச் செல்லும் கன்றைப்போலப் பின் தொடர்ந்தான். உற்ற ஆசைப் பெருக்கில் கிணற்றைப் பார்த்தான். சமயம் அறிந்தநான் கிளாடிஸின் கால்களை வாரி உள்ளே தள்ளினேன். உடலைவிட்டு உயிர் பிரியும்வரை கற்களைப் போட்டுப் போட்டுக் கொன்றேன். செய்தி அறிந்த காவலர்கள் என்னைத் தங்கள் முன் நிறுத்தி இருக்கிறார்கள். இதுதான் நடந்த வரலாறு.

மன்னவா! நான் யாருக்காகவாழ நினைத்தேனோ, அது கைகூடாமல் போய்விட்டது. குழந்தைக்காகச் செல்வத்தை உதறினேன். ஆனால் அதே குழந்தைக்காக என்கற்பை இழக்கச் சம்மதிக்கமாட்டேன். கற்புக்காக என் குழந்தையைக் கேட்டு இருந்தால் மகிழ்ச்சியோடு தந்திருப்பேன். எல்லாம் அணைகடந்தவெள்ளமாகிவிட்டது. மானத்தை இழந்து மழலையோடு வாழ்வதைக்காட்டிலும் மரனத்திற்காக மாள்வதுதான் மங்கையர்களுக்கு மங்காதபுகழ்......என்று கூறிகொண்டிருந்த தீமெக்லி தன் மடியில் இருந்த கட்டாரியால் தன் நெஞ்சில் பாய்ச்சிக்கொண்டாள். வாடிய வாழையெனச் சாய்ந்த தீமெக்லியின் நெஞ்சில் குருதி பீறிட்டது. அதை இருகைகளாலும் அடித்தபடி கதறிக் கதறிக் கண்ணீர் வடித்தது கைக் குழந்தை.

அவ்வளவையும் அசையாது நின்று கவனித்த அலக்சாண்டர் அக்குழந்தையை வாரி எடுத்து அணைத்தான். அங்குசூழ்ந்திருந்த பரிவாரங்களிடையே அமைதி சூழ்ந்தது. தீமெக்லியின் பாதங்களிலே மாவீரன் அலக்சாண்டர் மண்டியிட்டான். அவனது கண்களிலே நீர்த்துளிகள் தங்குதடையின்றி வெளிக்கிளம்பின. அதுதான் அந்த வீரமங்கைக்கு அவன் தந்த பாதகாணிக்கை.

★

# ஆயுள் தண்டனை

[ செஞ்சடையான் ]

பழியறியாப் பெண்ணொருத்திக்குப் பாவை நான் பிறந்தேன். பிறந்தபோதே தாய்முகம் காணாத சேயாக வளர்ந்தேன். தாயில்லா நிலையாலோ என்னவோ—பிறரிடம் 'நல்லவள்' என்று பெயரெடுத்தேன். என்னுடைய சிற்றன்னையிடமே 'குட் காண்டக்ட்' வாங்கி விட்டேனென்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

எல்லோரும் 'அண்ணன் மாதிரி' இருக்கலாமே தவிர; நம்முடைய சொந்த 'அண்ணனாகிவிட முடியுமா? என்னதான் மற்றவர்கள் இருந்தாலும், நான் வேலியில்லாத பயிராயிற்றே! ஆனாலும், வேலி காத்தானுக்கு வேலி எதற்கு? இப்படித்தான் நானும் வாழ்ந்து வந்தேன்.

பெண்கள் 'பிள்ளைப்பேறு' அடையும் வரைதான் மற்றவர்களிடம் பாசமும்-பரிவும் காட்டவேண்டுமா? என்னைத் தவிர மற்றப் பெண்களெல்லாம் அப்படித்தான் என்று நினைத்தேன்.

என் சிற்றன்னைக்கு ஒரு மகன் பிறந்தான். எனக்கோ அவன் ஆசைத்தம்பி எனத் திகழ்ந்தான். என்று அவன் பிறந்தானோ, அன்றே அவன் தாய் தந்த 'சர்டிபிகேட்டு' கிழித்தெறியப்பட்டது. 'நல்லவள்' நான் 'ஆகாதவள்' ஆனேன். பாவம், தந்தை என்ன செய்வார்? உலகத்திலே 'இரண்டாந்தாரம்' மணந்துகொண்டவர்கள் செய்ததைத்தான் அவரும் செய்தார். பதவிக்காகவும், பட்டத்திற்காகவும் சிலர் 'ஆமாம்' போடுவதைத் தவிர, வேறொன்றும் அறியார் அவர்.

பணிசெய்த நான் 'பாரம்' எனக் கருதப்பட்டேன். அவள் சொல்வதிலேயும் பொருளிருக்கிறது. நானென்ன சிற்றில் கட்டி விளையாடும் சிறுமியா? பருவம் அடைந்த பாவை இப்போது! மலராதபோது மொட்டு செடியின் பாதுகாப்பில் இருக்கவேண்டும். மலர்ந்து மணம் வீசினால், அது சேரவேண்டிய இடத்திற்குத்தானே செல்லவேண்டும்?

ஆசைத்தம்பியை நேசக்கரம் நீட்டி எடுத்து நெஞ்சாரத் தழுவினேன். அது 'அவளுக்கு' நெஞ்சில் முள் குத்தியது. எனது கன்னத்திலே சிற்றன்னையின் கரங்கள் விளையாடின. அதுகண்டு சிரித்தான்! சிரித்தான்!! பொங்கிச் சிரித்தான்!!! யாரோ பெற்ற எவனோ அல்ல — என் அருமைத் தம்பிதான். "அடிமை விலங்கொடியக் காலம் தொலைவில் இல்லை! விடுதலை! விடுதலை!! இருள் நீக்கும் உதயசூரியன் இதோ" என்றது அவன் ஒளிமுகம்! அவள் பிடுங்கிய வேகத்தில், தம்பியின் செம்மலர்ப் பாதங்கள் என் முகத்தைத் துடைத்தன. கண்ணீரும் மறைந்தது.

வீட்டார் என் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தனர். பெற்ற தாய் இல்லையே என்று வருந்தினாலும், 'இல்லறமே நல்லறம்' என்னும் வள்ளுவர் மொழியை நினைத்துக் கொண்டேன். ஏதோ நடுநிலைப் பள்ளியில் படித்த எனக்கு, உயர்நிலைப்பள்ளியை முடித்தவராகவாவது இருப்பார் என்று நினைத்தேன். எனக்கே கொஞ்சம் பணமிருந்தால், கல்லூரி பயின்றவரை நினைத்திருப்பேன். ஏனென்றால், பணத்துக்கும் மணத்துக்கும் இப்போது உறவு அதிகமாயிற்றே! என்றாலும், அவ்வளவு பேராசைக்காரியல்ல நான். அவருக்கே உரித்தான அகமும் புறமும் படித்திருப்பார்! சிலம்பொலிக்கும் செல்வராக இருப்பார்! அகத்தின் காதலுக்கும், புறத்தின் வீரத்திற்கும் சான்றாக விளங்குவார்! பகுத்தறிவுப் பண் இசைப்பார்! "கண்ணே கண்ணகி" எனக் கட்டியம் கூறுவார்! நான், 'உங்களுக்கு மாதவிகூட நான்தான்' என்பேன். மொத்தத்தில், தென்றல் வந்ததென முல்லை மலர்ந்ததெனக் கருதினேன் நான். எல்லாம் வீண் நினைவுகள்—விடியாக் கனவுகள்!

பழமையின் போர்வையிலே ஒரு பெரிய மனிதர் வந்தார்! தந்தையைப்போல என்று நினைத்தேன்; ஆனால் அவர் என்னைத் தாரமாக்கிக் கொள்வார் என்று தெரியாது. என் சிற்றன்னை, அவளைப் போலவே என்னையும் "இரண்டாந்தாரம்" ஆக்கிவிட்டாள். இனிப் பேசிப் பயன் என்ன? மாலையிட்டார் — மணாளரானார்.

காலம் நகர்ந்தது. என் கணவரும் இம்மண்ணைவிட்டு நகர்ந்தார். அவர் எனக்குத் தந்த சொத்தைக்கூடப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. கொஞ்சக் காலமானாலும், வாழ்க்கை வாழ்க்கைதானே? நானும், 'வாழ்ந்தவளாகி'விட்டேன்! என 'வருங்காலம்' வயிற்றிலே வளர்ந்தது.

தாயற்ற நான், சீரைப்பற்றி நினைக்கமுடியுமா? அனாதை மருத்துவமனையில் ஆண் மகனை ஈன்றெடுத்தேன். சின்னம்மா வேண்டாமென்றாலும், தந்தைக்காகத் தாய் வீடு சென்றேன். சரியான சீர் கொடுத்தாள் என் சித்தி! "பிறந்தபோது தாயைக் கொன்றாள். பிள்ளையைப் பெற்றாள், கணவனை ஒழித்தாள்! விதவைக் கோலத்திலே இங்கே யாரை விழுங்க வந்ததோ சனியன்" என்றாள்.

மனைவி என்ற மது மயக்கம், மகள் என்ற பாசத்தை மறந்தாவிடும்? நல்லவரை நயவஞ்சகராக்கிவிட்டாளே! என் தந்தையும் என்னை வெளியேற்றினார்.

வாழ்க்கை சிறுகதையல்ல—நீண்டதொடர்கதை. எனவே, நான் சாகவிரும்பவில்லை—ஆனால் துணிவிருக்கிறது. கடமைக்காக வாழ்கிறேன் நான்; மறுமணத்தையும் விரும்பவில்லை. மனைவியை இழந்த கணவன்மார் மறுகல்யாணம் செய்துகொள்ளலாமாம்—தாலியறுத்தவள், மறுதாலி கட்டிக்கொள்ளக்கூடாதாம். ஆண்கள் முதுமையை இளமையாக்கலாம் — என் போன்றோர் நிலை என்றும் சிரஞ்சீவியாம். வஞ்சிக்கப்பட்ட நான் — 'வாழ்ந்துவிட்ட நான்' இனி அதைப்பற்றி நினைப்பதே தவறு.

என் செல்வனுக்காக நான் வாழ்கிறேன். அவன் தக்க வயது வந்தவுடன் என் கதையைச் சொல்லப் போகிறேன். வஞ்சித்தவர்களுக்கு 'வட்டியும் முதலு'மாகக் கொடுக்கப்போகிறான். மொழியைத் தன் விழியெனக்கொள்வான் 'நம் நாடு' செழிக்க நாளும் உழைப்பான்.

எனக்குக் கிடைத்த இந்த 'ஆயுள் தண்டனை' என்னோடு நிற்கட்டும். மற்றப் பெண்களுக்கு வேண்டாம்.

# துணிந்து செய்தால்!

தென்னவன்

அன்று மாலை நான், அலுவல் முடிந்ததும், பகலெல்லாம், எண்ணிக்கையற்ற 'பைல்'களுடன் உறவாடிய களைப்புத் தீர — உலாவச் சென்றேன். அப்பொழுது என் உள்ளம் இறந்துவிட்ட என் தங்கையைப் பற்றி எண்ணியது. உணர்வின்றிச் சென்றேன்.

திடீரென ஒருகுரல், "ஏய் மாணிக்கம்! என்னபபா, இபபடி ஒரு மாபெரும் கோட்டையைப் பிடிக்கத் திட்டமிடுவதுபோல் சிந்தனையில் மூழ்கி, எதிரே வருகின்ற ஆள் கூடத் தெரியாமல் நடக்கின்றாய்?" என முழங்கியது.

"ஏய் கணபதி! வாடா! என்ன செய்கின்றாய்? இங்கு எங்கே வந்தாய்?" என்றேன் - அவனைக்கண்ட அளவற்ற மகிழ்ச்சிக்கிடையில்.

"இப்பொழுது இந்த ஊரிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ளதோர் பட்டியில்தானடா எனது உத்தியோகம் நடக்கிறது" என்றான். ஆம் அவன் தன் ஆரம்ப ஆசிரியர் அலுவலைத்தான் இத்துணை சலிப்புடன் கூறினான். "சரி வாப்பா ஆற்றுப்பக்கமாய்ப்போய்த் தென்றலை அனுபவித்துவிட்டு வருவோம்" என்றேன்.

"போடா! எனக்குத் தென்றலின் இனிமையையும், தேனிலவின் குளுமையையும்தான் அனுபவிக்க நேரமிருக்கிறதா? இப்பொழுது போய், அடுப்போடு போராடினால்தான் ஒன்பது மணிக்குள்ளாகவாவது சோறாக்கி முடிக்கமுடியும்" என்று கூறிக்கொண்டே நகர்ந்தான்.

சரி கணபதி! நான் இங்கு வந்து ஒரு வாரம்தான் ஆகின்றது இப்பொழுது இவ்வூரில்தான் அலுவலாற்றுகின்றேன். வருகின்ற ஞாயிறன்று நீ என் அறைக்கு வா, பேசிக் களிப்படையலாம் என்று கூறி அவனை அனுப்பினேன்.

செல்லும் பொழுது அன்பான நண்பன் கணபதிராமனைப் பற்றியும், அவனை எதிர்பாராத வகையிற் சந்தித்ததைப் பற்றியும் எண்ணி எண்ணி என் உள்ளம், துள்ளிக் குதித்தது — புள்ளி மானைப்போல்.

கணபதிராமனும் நானும் எங்கள் சொந்த ஊராகிய தென்பாதியில் பெரும் பள்ளியிறுதி வகுப்பு வரை ஒன்றாகவே படித்தோம். பின்னர் நான் கல்லூரியிற் படிக்க என் மாமாவுடன் சென்னை சென்றுவிட்டேன். அங்கு பி. ஏ. படிப்பை முடித்துவிட்டு, இரண்டாண்டு வேலையிலாக் கொடுமைக்கு ஆளாகி இன்று, மதுரநல்லூர் துணை வட்ட அதிகாரி (டிப்டி தாசில்தார்) அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணி புரிகின்றேன்.

அன்று பிரிந்த என் அருமை நண்பனை இன்றுதான், தாடியுடனும், எண்ணெயை எண்ணிப் பார்க்காத தலையுடனும், காவி நிறம் கப்பிக்கொண்ட உடுக்கையுடனும் பார்க்கின்றேன்—பரிதாபமாக.

ஞாயிறன்று மாலையில் என் அறைக்கு வந்தான். "என்ன கணபதி!-பகலிலே வரவேயில்லை" என்றேன்.

"மாணிக்கம்! இன்று உன்னுடன் உலாவ வரவேண்டும் என்ற எண்ணத்தில் மத்தியானமே சமையலை முடித்தேன்" என்றான்—உல்லாசமாக வாழவிரும்பும் என்னையொத்த கட்டிளங் காளை.

உடனே, இருவரும் ஊருக்கு மேற்கே மணல் மட்டும் ஓடும் வைப்பாற்றினை நோக்கி நடந்தோம்.

"கணபதி! என்னப்பா இவ்வளவு இளைத்துவிட்டாய்? உன்னைப் பார்க்க எனக்கு வேதனையாய் இருக்குதப்பா! உன் அப்பா, அம்மா, தம்பி, தங்கைகள் நலமா?"

"மாணிக்கம்! எல்லோரும் வாழுகின்றோம், அவ்வளவு தான். ஆனால் எனக்கு மட்டும் மன அமைதியில்லை. ஓயாத துன்பத்தினையே என் உள்ளம் சுமக்கின்றது. எனது நிலையை நீ அறிந்தால் மிகவும் துன்பப்படுவாய்! ஆதலால் வேறு ஏதாவது பேசுவோம். உன் கல்லூரி வாழ்வைப் பற்றியும், அதோடு உன் மாமா மகள் மரகதத்துடன் ஆடிய காதல் விளையாட்டைப்பற்றியும் கூறு! அது இப்பொழுது பெரிய பொண்ணாயிருக்குமே? கூறு இன்றாவது நான் சற்று அமைதியாய் இருக்கின்றேன்" என்றான்.

அப்பொழுது அவனது முகத்தில் படிந்த சுருக்கங்களில் மின்னலைப்போல் தோன்றி நெளிந்தோடிய கோடுகள் அவனது துயர உள்ளத்தை தெள்ளத் தெளியக் காட்டியது. நான் மிகமிக வருந்தினேன்.

"கணபதி—உனது உள்ளத்து வேதனையை என்னிடம் கூடவா கூறக்கூடாது? உன் துன்பத்தை நானும் கொஞ்சம் பங்கிட்டுக் கொள்ளக்கூடாதா?" என்று கெஞ்சிக் கேட்டேன்.

"மாணிக்கம்! நீ பிரிந்து சென்றவுடன் என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடினேன். என் அப்பா பொல்லாத வறுமையில்

இடைந்து உடைன்றார். அவரிடம் நான் மேற்படிப்பைப்பற்றிய பேச்சையே பேசவில்லை. ஆம், அவரிடம் நான் எப்படிக் கேட்பேன்?

"நாம் படிப்பை முடித்த பொழுது எனது மூத்த தங்கை விமலா ஆறாம் படிவத்திற்கும், என் இளைய தங்கை கோமதி நான்காம் படிவத்திற்கும், மூன்றாம் தங்கை இலட்சுமி இரண்டாம் படிவத்திற்கும், எனது நாலாவது தங்கையும், தம்பியும் முதற் படிவத்திற்கும் வந்தனர். அதோடு துவக்கப்பள்ளியில் இரு தங்கைகளும் ஒரு தம்பியும் படித்துக்கொண்டிருந்தனர். இந்நிலையில் நான் எப்படி என் படிப்பைப் பற்றி நினைப்பேன்?"

"அப்படின்னா உனக்கு எத்தனை தங்கை தம்பிகள்?"

"குறைவில்லையடா! ஆறு தங்கைகள்—இரு தம்பிகள். ஏனையோர் சிறுவர். படிக்கும் எல்லோருக்கும் முழுச் சம்பளமும் கட்டவேண்டும். நாங்கள் என்ன செய்யமுடியும்?"

"ஆமா, உன் அப்பா இதற்குள் ஆசிரியர் அலுவலிலிருந்து ஓய்வு பெற்றிருப்பார்களே?"

"ஆம், நான் படித்து முடித்த அடுத்த ஆண்டு ஓய்வு பெற்றார். இப்பொழுது பஞ்சாங்கம் பார்க்கின்றார்."

"இப்போது எந்த வருவாயைக் கொண்டு தங்கை தம்பிகளைப் படிக்க வைத்தீர்கள்?"

"கேள் மாணிக்கம், என் மூத்த தங்கையை ஆறாம் படிவத்துடனும், எனது இளைய தங்கைகளை உயர்நிலைப் பள்ளியிலிருந்தும் நிறுத்திவிட்டார் என் அப்பா! இப்பொழுது சிறிய தங்கைகளும் தம்பியும்தான் படிக்கின்றனர்."

அவர்களின் முன்னேற்றத்திற்காகத்தான் நான் இன்று, இந்த அலங்கோலமான வாழ்வு வாழுகின்றேன். கடையில் உண்டால் செலவு அதிகம் ஆகும் என்றுதான் நானே அடுப்பு ஊதிப் பிழைக்கின்றேன். புரிந்ததா என் வாழ்க்கை?"

"கணபதி! உங்கட்குக் கொஞ்சம் பரம்பரைச் சொத்து உண்டல்லவா?"

"அதையெல்லாம் விற்றுத்தான் என்னையும் தங்கைகளையும் இந்நிலை வரை படிக்க வைத்தார் என் அப்பா!"

"படிப்பை நிறுத்திய உன் தங்கைகள் என்ன செய்கின்றனர்?"

"எங்கள் பொண்ணுகள் என்ன செய்வார்கள்? கல்கி, விகடன், மித்திரன், கலைமகள் படிப்பார்கள்! அதிலும் நேரம் போகவில்லையென்றால், நாலைந்துபேர் கூடிக்கொண்டு வம்புப் பேச்சுப் பேசுவர். வேறு என்னசெய்யத் தெரியும் இவர்கட்கு? தின்பதற்குத் தின்பண்டங்கள் செய்வர். சுவையாக உண்பர்! அழகாக, ஆடம்பரமாக உடுப்பர்! சோம்பலை வரவழைத்துக்கொண்டு உறங்குவர்! 'அனுபவிப்பதில் அவர்களும் சரி, இந்த நாட்டுக் கடவுள்களும் சரியப்பா!"

"ஆமாம் கணபதி! உங்கள்பெண்கள் உழைக்க விரும்புவதில்லை. அவர்களை உழைக்க விடுவதுமில்லை. அது முன்னாளைய வழக்கம். இன்றும் நீடிக்கின்றது! முன்பெல்லாம் உங்களுக்கு அரசியல் அலுவலில் ஏகபோக உரிமை இருந்தது. சாதாரண எழுத்தர் பதவியிலிருந்து உயர்ந்த நிலையிலுள்ள எல்லாப் பதவிகளிலும் இருந்தனர். அப்பொழுது உங்கள் பெண்கள் உழைக்காமல்—மனித ஆற்றலை வீணாக்கிக்கொண்டு இருக்க முடிந்தது.

ஆனால் இன்று அந்நிலை மாறிவிட்டது! நம் தமிழகத்தில் வகுப்புவாரி உரிமை வேண்டுமென்பதற்காக—இங்குள்ள கழகங்களைச் சார்ந்த பெரியோரும், பிறரும் போராடி, வெற்றியும்பெற்று, இன்று மக்களும் அதை அனுபவித்து வருகின்றனர். அதனால் உங்கள் சமூகத்தாருக்குப் பதவிகள் கிடைக்கும் வாய்ப்புச் சிறிது குறைந்துவிட்டது! இல்லையென்றால் நீயெல்லாம் ஆசிரியர் அலுவலுக்கு வருவாயா? உன் அப்பாதான் பஞ்சாங்கம் பார்த்துக் கொண்டு இருப்பார்களா? கணபதி! உன் தங்கைகளில் மூவர் பெரியவர்கள் என்றாயே, அவர்களுக்குத் திருமண ஏற்பாடுசெய்து மணம் முடித்துக் கொடுத்துவிட்டால் உங்கள் சுமை கொஞ்சம் குறையுமல்லவா?

"என் மூத்த தங்கைக்கு மாப்பிள்ளை தேடினோம். சிலர் வந்தனர். அவர்களிற் சிலர், "பொண்ணுக்கு பாட்டுத் தெரியுமா? நடனம் பழகியிருக்காளா? வயலின் வாசிப்பாளா?" என்று கேட்டனர். வேறு சிலர், "ஐயாயிரம் ரொக்கமும்—இரண்டாயிரம் நகையும் தருவீர்களா?" என்று தங்களை விலைகூறினர். ஆம், வரதட்சிணை கேட்டனர்."

"அடப்பாவிகளா? உன் சொந்தத்தில் மாப்பிள்ளைகள் இல்லையா?" என்றேன்.

இங்கு ஏதப்பா சொந்தமும் பந்தமும்! நானும் நாலு பணத்தோடு இருந்தால் "அம்மான் அத்திம்பேர்" எனக் கூறிக்கொண்டு வருவார்கள். என் அத்தை பையனே வரதட்சிணை கேட்டுவிட்டானே—எங்களது ஏழ்மை தெரிந்திருந்தும்! இவர்களுக்குக் கொட்டியழ நான் எங்கு சென்று திருடுவேன்" என்றான் உணர்ச்சியுடன்.

கணபதி! நீ கூறுவதும் ஓரளவு உண்மைதான். எங்கள் வீடுகளில், அதாவது, பிராமணர் அல்லாதார் வீடுகளில் — உள்ள பெண்கள் ஏதாவது ஒரு வேலை செய்தே பிழைக்கின்றனர். எந்த வேலையும் கிடைக்காவிட்டால் மாட்டுச் சாணம் எடுத்தாவது எருத்தட்டி விற்றுப் பிழைக்கின்றனர். ஆனால் இன்று உங்கள் வீட்டில் நாலைந்து பெண்கள் இருந்தும் எவ்வித பயனும் இல்லை. மாறாக அவர்கள் படிப்பதற்காக வார ஏடுகளும் மற்றும் ஆடம்பரப் பொருள்களும் வாங்கச் செலவுசெய்ய வேண்டியுளது என்கின்றாய்! கொடுமை!

"......" கணபதி பதில்பேசவில்லை.

மேலும், இன்றைய சமுக அமைப்பில்—அதன் வளர்ச்சியில்—எந்த ஒரு சாதியாரும் "நாங்கள் உயர்ந்த சாதி—வேலைசெய்யவெளியில் வரமாட்டோம். எங்கள் கௌரவம் வெளியில் குறைந்துவிடும்" என்றெல்லாம் கூறிக்கொண்டிருந்தால் அவர்களுக்குப் பசியும், பட்டினியும்தான் பரிசாகக் கிடைக்கும்" என்ன என் எண்ணம் சரிதானே கணபதி?

கணபதி! இன்னொரு கொடிய பழக்கம் ஒன்று உங்கள் சமூகத்தில் இருக்கின்றது. அதுதான் வரதட்சிணை கேட்கும் கேவலமான பழக்கம். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இப்படியொரு கண்மூடித்தனமான பழக்கத்தைச் சிலர் கைக்கொள்வதைக் காண என் உள்ளம் மிகவும் வேதனையடைகிறதப்பா! நான்கு ஆண் குழந்தைகளைப் பெற்ற தகப்பன், வேறு எந்த வழியையும் தேட வேண்டாம் பணம் சேர்க்க. தனது மக்கள் திருமணத்தின் போது பெண்கொடுக்கும் அப்பாவி சம்பந்திகளிடமிருந்தே வரதட்சிணை என்னும் பேரால் ஏராளமான பணத்தைப் பிடுங்கிக்கொண்டு

மாக வாழலாம். அந்தக் கயவர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமப்பா!

இப்பொழுது என்னவோ வரதட்சிணை ஒழிப்பு மசோதா கொண்டுவந்து சட்டமாக்கப்படுவதாகவும், அதில், வரதட்சிணைக்குப் பதில் **"அன்பளிப்பு"** என்ற பெயரால் ரொக்கமும் நகையும் கேட்டுப் பெறலாம் என்ற ஒரு திருத்தமும் கொண்டு வரப்பட்டிருக்கிறதாம். வரதட்சிணைக்குப் பதில் அன்பளிப்பு! இப்போது வரதட்சிணை கேட்பவர்கள், இனி, அன்பளிப்பு எவ்வளவு தருவீர்கள் என்று கேட்பார்கள், அவ்வளவு தான். அது கிடக்கட்டும்,

கணபதி! உன் தங்கைகளை உன் சமுகத்தைச் சார்ந்த ஏழைகளுக்குக் கட்டிக்கொடுத்தால் என்னப்பா?

மாணிக்கம்! — என் சமுகத்தில் ஏழையென்பவன் அதிகமாகப் படித்திருக்கமாட்டான். ஆதலால் உடலுழைப்பில்லாத எந்த வேலையும் அவனுக்குக் கிடைக்காது; உடலுழைப்புள்ள தொழிலைச் செய்யவும் அவன் விரும்பமாட்டான். இதுவரை கூலிவேலைக்கு வந்த பிராமணனைப் பார்த்ததுண்டா? கோவில் வேலைக்குப் போகலாம் அவன். இக்காலத்தில் கோவில்கட்கு வேடிக்கை பார்க்கத் தான் ஆட்கள் வருகின்றனரேயன்றி அருச்சனை செய்வதற்கும்— உண்மை வழிபாட்டிற்கும் வருவதில்லை. ஆகவே கோவில்களில் அதிகமான ஆட்களுக்கு வேலை கிடைக்கவில்லை. முன்னர் கோயில் கட்டிய செல்வர்கள் இப்பொழுது கல்விச் சாலையும் மருத்துவ விடுதியும் கட்டுகின்றனர். திருமண விழாக்களுக்கு ஐயர்களையே அழைப்பதில்லை இப்பொழுது. நாங்கள் இருக்கவேண்டிய இடத்தில் — சீர்திருத்தத் திருமணம் நடக்கின்றது. காலம் மாறிவிட்டது. என்ன செய்வார்கள் எங்கள் சமுகத்தவர்?

"இங்கிலையில் ஏழைக்கு என் தங்கையைக்கொடுத்துவிட்டுக் கண் கலங்குவதைவிடச் சும்மா இருப்பது நலமல்லவா?' என்றான் நொந்த உள்ளத்துடன்.

கணபதி! சீர்திருத்தத் திருமணம் என்றதும் எனக்கு ஒரு நினைவு தோன்றுகின்றது. ஆனால் காலம் மாறிவிட்டதைப் புரிந்துகொண்ட உனக்குத்தான் துணிவும் வேண்டும்! என் எண்ணத்தைக் கேட்பாயா? கேட்டால் நீ உன் சமுகத்திற்கே வழிகாட்டியாய் இருப்பதோடு, இந்த நாட்டிலுள்ள சாதியெனும் நச்சு மரத்தை வேரோடு வெட்டி வீழ்த்திய வீரனாகவும் விளங்குவாய்! எண்ணற்ற ஏழைப் பிராமணப் பெண்களைக் காப்பாற்றிய தியாகியாக வாழ்வாய்! கேட்பாயா என் எண்ணத்தை? நடப்பாயா அதன் வழி?"

"என் தங்கைகளை வேறு சாதிக்காரர்கட்குத் திருமணம் செய்து கொடுக்கச் சொல்லுகின்றாயா? இது நடைபெறக் கூடியதா? நான் விரும்புகிறேன். ஆனால் எனது பெற்றோரும் பழைமை விரும்பிகளாகிய சமுகத்திலுள்ள மற்றோரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமே இந்த எண்ணத்தை!

கணபதி! நீ கூறும் உன் சமுகத்தார் இன்று உனக்கு உதவுகின்றனரா? இன்றுவரை உன தங்கையரில் ஒருத்தியை மணமுடிக்க யாராவது முன் வந்தனரா? அன்றி எந்தப் பெரியவராவது அது குறித்து வாயாலாவது பேசினரா? உன் பெற்றோர் இன்னும் எத்தனை நாட்களுக்கு உங்களுடன் வாழ்ந்திடுவர்? பழுத்த இலைபோன்ற அவர்கள், நாளைக்கு அல்லது அதற்கு மறுநாள், இந்தச் சமுகக் கிளையிலிருந்து உதிர்ந்துவிடலாம். அதன் பின்னர் உன் தம்பி தங்கையர்க்கு நீதானே உயிர்! நீதானே ஒப்பற்ற வழிகாட்டி! அந்நிலையிலுள்ள நீ காலத்தை அறிந்து என எண்ணத்தை ஏற்கக் கூடாதா? இந்த நல்ல செயலைச் செய்ய உன் பெற்றோரையும் மற்றோரையும் சொல்லித் திருத்து— அவர்கள் கேட்காவிட்டால் துணிந்து உன் தங்கையரின் உதவியால் அச்செயலை நிறைவேற்று! எதிர்காலம் உன்னைப் புகழும்.

இன்று உன் வாழ்விலும் தாழ்விலும் கவனம் செலுத்தாத உனது "உயர்ந்த" சமுகம், நாளை உன் வீட்டில், யாராவது மானத்துக்கு அஞ்சி இறந்தால்—பட்டினியால் செத்தால், "ஐயோ! தெருவிற் பிணம் கிடக்கின்றதே" எனக் கூக்குரலிட்டுக்கொண்டு அதை எரிக்க முன்வரும்! இதை மாற்ற நீ விரும்பவில்லையா? காலத்திற்கு ஏற்றவாறு உன் கருத்தையும் மாற்றிக்கொண்டு, இவ்வுலகில் நல்லவனாகவும் வல்லவனாகவும் வாழ விரும்பவில்லையா நீ?

"மாணிக்கம்! இன்று நீ இப்படிக் கூறுகின்றாய், நாளைக்கு அவர்கட்குப் பிறக்கும் குழந்தைகளின் கதியைப்பற்றிஎண்ணிப்பார்த்தாயா?",

நீ, நான் சொல்லும் செயலைத் துணிந்து செய்தால், உனது ஐந்தாறு தங்கைகட்கு வேறுகுல மாப்பிள்ளைகளும்; உனக்கும்உனது தம்பியருக்கும் வேறுகுலப் பெண்களும் உறவாகக் கிடைப்பார்கள். தவிர உன்னைப்பின்பற்றி இன்னும் சிலரும் கலப்பு மணம் செய்யலாம். பிறருக்கும் செய்விக்கலாம். அப்பொழுது உங்களுக்குள் பெண் கொடுக்கல் வாங்கல் நிகழாதா? தவிரவும் இன்னும் இருபதாண்டுகள் கழித்தும் உலகம் இப்படியே தான் இருந்துவிடுமென எண்ணுகின்றாயா? நிச்சயமாக் கூறுகின்றேன், கணபதி! இன்றைய தமிழகத்தைப் போல் இருக்காது! கண்டிப்பாய் மாறிவிடும். அன்று நம் தமிழகம் பண்டைக்காலத் தமிழகத்தைப்போல் சாதி குலம் இல்லாத தமிழகமாய்த்தான் இருக்கும். அந்தப் புதிய தமிழகத்தைக் காட்டும் கைகாட்டியாய் இருக்கத்தான் உன்னை வேண்டுகின்றேன். துணிந்து செய்வாயா நான் சொல்லியதை?

இவ்வாறு பேசிக்கொண்டே திரும்பினோம். நண்பன் நாளை வருவதாகக் கூறிச் சென்றான். நானும் இன்று ஒரு நல்ல செயல் செய்ததாக எண்ணித் தூங்கினேன்.

மறுநாள்வந்தான். 'வா கணபதி என்று வரவேற்றேன். என்ன முடிவுடன் வந்தாய்?" என்றேன்.

மாணிக்கம்! நான் உன்னிடம் ஒன்று கேட்பேன் — உதவுவாயா? முதலில் நீ என் தங்கையை மணந்து கொள். நானும் வேறு சாதியில் பெண் கட்டிக்கொள்ளுகின்றேன். பின்னர் நாம் இருவரும் சேர்ந்து எனது „ ஏனைய தங்கைகட்குத் திருமணம் முடிக்க முயலுவோம். நீ எங்கள் வீட்டிற்கு மாப்பிள்ளையாய் வருவதாயிருந்தால்—எனது பெற்றோரும், தங்கைகளும் இசைவார்கள். அவர்கள் இசையாவிட்டால் நான் நல்ல பல காரணங்களைக் கூறி இசையவைப்பேன்" என்றான் குன்றாத ஆர்வத்துடன்.

நானும் சிந்தித்தேன். எனது கொள்கையைச் செயலில் காட்ட இது ஒரு நல்ல வாய்ப்பென்று கருதினேன். அவன் தங்கையை ஏற்றுக்கொள்ள முடிவு செய்தேன்.

எங்கள் இருவருக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

# "அறம் வாழ்கிறதா?"

கன்னற் குரலெடுத்துக் கூவும்
கருங்குயிலே கேள்!

மலர்தலை உலகின்கண் தோன்றியவர் அனைவரும் வாழதற்குரிமையுடையார் என்பதை நீ அறிவாய். ஆனால் எம் நாட்டினர் இஃதை இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. பெரும்பாலோர் தான் தான் வாழவேண்டும் என்றே முனைகின்றனர். எப்படியாவது வாழவேண்டுமென்று விழைகின்றனர். வாழ விரும்பும்போது ஒருவர் உணவை ஒருவர் பறிக்கும் வழக்கம் நும்மினத்தில் இல்லை. எம்மினத்திலோ ஒரு செல்வனின் ஆரவார வாழ்வு பல ஏழைகளின் பிணங்களை அடித்தளமாகக் கொண்டு அமைகிறது. இப்படிப்பட்ட ஆரவார வாழ்வையே அரசியற் சீர் வாய்ந்தோரும், கற்றோரும் மற்றோரும் நாகரிக வாழ்வென்று போற்றுகின்றனர். பொன்னிழையும், பட்டுத்துணியும்; புட்டாமாவும், மகிழ்வுந்தும், ஆங்கில மொழிப் பயிற்சியுமாகிய இவைகளே நாகரிக வாழ்வின் கருவிகள் என்று எண்ணுகின்றனர். பொருளுக்குள்ள பெரு வலிமையைக் கண்டு, பழிமலைந்தாவது ஆக்கமெய்த வேண்டுமென்று பெரும்பாலோர் முனைகின்றனர். பொருள் படைத்தோர் செய்யும் இழிசெயல்கள் எல்லாம், அவர்கட்குள்ள செல்வாக்கால் மூடப்படுகின்றன. மிகப் பெரிய பழிச்செயல் செய்த ஒரு செல்வனும், நல்லவனாக நடிக்க முடிகின்றது. இந்நடிப்பையே நாகரிகம் என்று உலகம் புகழ்கிறது. எத்துணை தீயராகவிருப்பினும் செல்வர்கட்கே வாய்ப்பும் வாழ்வும் அளிக்க அரசு முந்துகின்றது. மாதவர் நோன்பு மடவார் கறபு ஆகிய இவைகட்குத் துணை நிற்கவேண்டிய அரசு, இன்று கொலையாளிகட்கும், கொள்ளையடிப்போர்க்கும் புகலிடந்தந்து போற்றுகிறது. இந்நிலையில் நல்லவர்கள் யாங்ஙனம் வாழ்வு நடாத்துவது? பெயக்கண்டும் நஞ்சுண்டமைகின்ற நனி நாகரிகம் எங்ஙனம் வாழும்?

"பழிமலைந் தெய்திய ஆக்கத்தின்
சான்றோர்
கழிநல் குரவே தலை"

என்று மக்கள் போற்றுவார்களா? வள்ளுவரும், இளங்கோவும், சாத்தனாரும் தோன்றிய நாட்டில் இன்று அறம் வாழ்கிறதா?

நீயே சொல் அன்பே! தலைவனை இழந்த ஓர் ஏழைக்குடும்பம் இந்நாட்டில் வாழமுடியுமா? அக்குடும்பம் உயிரோடிருக்க ஏதாவது வழியுள்ளதா?

ஒரு வழக்கறிஞரை வைத்து வாதிடப் பொருள்வலியற்ற ஒரு ஏழைக்கு நீதி கிடைக்கச் சட்டத்தில் இடமுளதா? உண்மை உரைக்கும் சாட்சிக்கு ஏதாவது பாதுகாப்புண்டா?

பெற்றோரை இழந்து வாடும் குழவிகள் எத்தனை? எத்தனை? அவைகட்கெல்லாம் புகலிடந் தந்து புரப்போரை இந்நாட்டின்கண் காண ஒல்லுமா?

கொழுநனையிழந்த ஒரு கன்னிப் பெண் தன் திறங்காத்து இங்கே வாழமுடிகிறதா?

"யாதும் ஊரே! யாவருங் கேளிர்"

என்ற பொன்மொழி இங்கேதான் தோன்றியுள்ளது.

"உண்டாலம்ம இவ்வுலகம்..."

என்ற பா தமிழின் கண்ணேதான் எழுந்துள்ளது.

'ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற பொருளுரை புகன்றவன் ஒரு தமிழனே!

இத்தகைய ஆன்றோர்களின் மொழிகள் எல்லாம் ஈண்டைக்கு என்ன பயனைச் செய்தன? இவைகள் எல்லாம் நாகரிக வாழ்வின் தடைக்கற்களா?

உறுபசியோடும், ஓவாப் பிணியோடும் போரிட்டுக் கொண்டிருப்போரைச் சேரிகளிற்சென்று காண்டல் வேண்டும். "பரந்து கெடுக வுலகியற்றியான்" என்ற பண்பாடுங் குழவிகளைச் சிற்றூர்களிற் சென்று கண்ணுறல் வேண்டும். இந்நிலைமைகளைக் களைதற்கு இது வரையில் அரசு செய்த செயல்தான் என்ன? உணவுப் பெருக்க வாரம் நடாத்துவதால் ஏழைகளின் பசிநோய் அகன்றுவிடுமா? சுகாதாரவாரம் கொண்டாடுவதால் தேடுவாரற்றுக் கிடக்கும் குழவிகள் நல்வாழ்வு பெற்றுவிடுமா?

செல்வர்களின் இன்ப வாழ்விற்குப் பல வாயில்கள் அமைத்துக் கொடுத்த அரசியலார், அவர்களின் புகழ் வாழ்விற்கும் பல துறைகளை அமைத்துக் கொடுக்கின்றனர். அவ்வளவேதான். இங்ஙனம், அறிவறை போகிய சிலரால் ஆளப்படும் ஆட்சி இந்நாட்டில் நிலவும்வரை, ஏழைகள் இன்ப வாழ்வினைக் காண்டலுந்தான் இயலக் கூடிய தொன்றோ?

இவற்றையெல்லாம் நினைந்து பார்க்கும் அறிவுடைத் தமிழனின் உள்ளம் அமைதியில் படியுமா? படிதல்தான் முறையாமோ? இன்று, தமிழ் நிலமகள் வேண்டுவது, புகழ் விருப்பால் தொண்டு செய்வதாக நடிக்கும் இளைஞர்களையன்று. தொண்டுள்ளத்தால் உந்தப்பட்டுப் பிறர்க்கென வாழ விழையும் பெருந்தகையாளர்களையேயாம். இவற்றையுணர்ந்து "செயல்" வேண்டியன்றோ,

"கொடுவாளினை எடடா—மிகக்
கொடியோர் செயலறவே"

என்று கூறப்படும் இக்காலத்தில் கொடியோர் செயலினை அறுக்க வேண்டியது அறிவாகிய வாளன்றோ? தமிழன் உயர்வுற ஆற்ற வேண்டுவது அறிவொடு பட்ட வினையன்றோ? செயலின்றி எந்த ஒரு நாடும் சிறப்புறுமா? இதனை விடுத்துக் கவிஞன் மொழிகளைச் சொற்பெருக்கிற்கே பயன்படுத்தல் சால்புடைச் செயலாமோ? பல சொல்லுதலால் காலக் கழிவும் கடமைச் சோர்வும் ஏற்படலைக் கண்டும் அதனையே பாராட்டல் தமிழகத்தின் இளைஞர்கட்கு அழகாமோ?

அன்பே கேள்! இடைக்காலத் தமிழர் செய்தக்க செய்யாமையான் கெட்டார்கள். இற்றைத் தமிழரோ செய்தக்க அல்ல செய்து கெட்டுவிட்டார்களோ என அஞ்சுதும். எனவே பாவாய் நீ செலும் இடந்தொறும்

"......................வயிற்றுக் கூழுக்
கூழின்றி வாடுகின்றார்; எழுந்திரு நீ!
இளந்தமிழா குறைதவிர்க்க!
ஆழிநிகர் படை சேர்ப்பாய்! பொருள்
சேர்ப்பாய்!
இன்பத்தை ஆக்கு விப்பாய்!

என்ற கவிஞனின் பாடலை இசைத்துச் செல்வாயாக.

வளர்க தமிழ்! வாழ்க தமிழினம்!!

— "திருமாறன்".

# "இயற்கையின் சதி"

(கோவி. கார்முகில்)

அவன் என் நண்பன்!

கற்பனையோடு உறவாடும் கவிஞன்!

ஏழை!

உலகைப்புரிந்துகொள்ளாதவன்!

தான் வாழவேண்டுமென்று அவன் எண்ணியதே இல்லை. பிறர் வாழ வழியில்லையே எனக் கவலை கொள்பவன்.

அழகன்!

"ரோசா நிறம், நீண்ட மூக்கு அழகிய கண்கள்" இப்படித்தான் பெண்களை வர்ணனை செய்வார்கள். என் நண்பனை நான் அதனினும் பன்மடங்கு வர்ணனை செய்ய வேண்டும்.

அழகும் அறிவும் உறவுகொண்ட இளைஞன் அவன் — அனாதை— நாதியற்று வீதியில் திரிந்தவன், நான்தான் அவனுக்கு அணைப்புத் தந்தேன். அவன் மீது ஏனோ மீளாத அன்பும் பற்றும் பிறந்துவிட்டது.

அவன் என்றும் சுயநினைவோடு இருந்ததில்லை. சிந்தித்துக்கொண்டே இருப்பான். அவன் எண்ணங்கள் மலரும், ஏடுகள் குவியும்.

ஊரார் அவனை புகழ்ந்தனர். அவன் ஏடுகள் அவர்களைப் புகழ வைத்தது. அதன் பெருமை என்னைத்தான் சேரும்.

மாணிக்கத்தைக் குப்பையிலே வீசிவிட்டது உலகம்! நான் கண்டெடுத்து, பட்டையிட்டு, இது மாணிக்கமென்று உலகுக்குக் காட்டினேன்.

அவன் ஒரு புத்துலகச் சிற்பி!

அவன் எழுத்தும் பேச்சும், புதுமையைத்தான் காண்பிக்கும். அடிக்கடி என்னைப் புகழ்வான்.

அவன் கவிதைகள் வாழ்வின் முடிவைத்தான் காண்பிக்கும். வாழ்வின் ஆரம்பத்தை — இன்பத்தை அதில் காணமுடியாது. மாறாக, துன்பத்தையும்— சாவையும் தான் காணமுடியும். தன் வாழ்வின் அடிப்படையே அவன் எழுத்துக்களாயின. மனிதன் ஏன் பிறந்தான்? ஏன் இறந்தான்? என்றே அவன் எழுத்துக்கள் கேட்கும்.

உலகத்தின்மீது பற்று இல்லாத அவனை, பற்றோடு வாழவைக்க வேண்டுமென்பது என் ஆசை, அதற்குத்தான் ஒருவளைத் தேடிக்கொண்டிருந்தேன்.

தோட்டத்தில் இருக்கும் முல்லையை மறந்துவிட்டு, அண்டை வீட்டு மல்லிகைக்குக் காத்து நிற்பானேன்?

என் எண்ணம் இப்படித்தான் நினைத்தது; என் தங்கை கமலம் அவனுடன் இல்லறத்தை நடத்தும்படி செய்யவேண்டுமென்பது என் ஆசை. என் தங்கைதான் அவனுக்குப் பொருத்தமானவள்— அவன் அறிவிற்கும் அவள்தான் ஏற்றவள். இது என் உள்ளத்தின் எண்ணம். ஆசை நிறைவேறும் என்றுதான் நினைத்தேன். ஊரின் எதிர்ப்பை எப்படிச் சகிப்பது என்றுதான் எனக்குப்புரியவில்லை. பரம்பரை பணக்காரன் ஒருவனின் தங்கை ஒரு ஏழை நாடோடியை, மணப்பதா? கூடாது, இப்படித்தான் ஊரார்கள் பேசிக்கொள்ளு வார்கள்.

என் தங்கையின் விருப்பத்தை இன்னும் நான் கேட்கவில்லை. என் உடன்பிறப்பு என்றாலும் அவள் உள்ளத்திற்கு ஆணையிட எனக்கு உரிமையில்லை. அவள் மறுத்துவிட்டால்!...

ஒரு வார்த்தை! என் நண்பனையும் கேட்கவேண்டுமென்பதுதான். நான் அவன் விடுதியை நோக்கி நடந்தேன். என் கண்களும், செயல்களும் என் நண்பனின் எதிர்காலத்தையே நோக்கிக்கொண்டிருந்தது. அவன் வாழ்வு வளம் பெறவேண்டுமென்பதே என் ஆசை.

என் நண்பனின் அறை திறந்து கிடந்தது, வியப்போடு உள்ளே சென்றேன்.

அங்கே, என் நண்பனைக்காணவில்லை. அவனின் கிழிந்த கந்தலாடைகள் தொங்கிக்கொண்டிருந்தன. ஏடுகள் அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன. எழுது கோல்கள் மூலைக்கொன்றாய்க் கிடந்தன.

என்றும் நான் கண்டிராத நிகழ்ச்சி! என் உள்ளம் துடித்தது. ஏன்?... [illegible] கிடந்த காகிதங்களைப் பொறுக்கி எடுத்துப் பார்த்தேன்.

அத்தனையும் தேன்சொட்டும் காதல் கடிதங்கள். ஒரு இளம் பெண்ணின் உள்ளத்தைத்திறந்து காட்டிக்கொண்டிருந்தது.

ஒன்றல்ல, இரண்டல்ல ஐந்து.

அன்புள்ள ராசாவுக்கு!...

அன்புள்ள என் ஆசை அரசுக்கு!...

என் இதயங்கவர்ந்தவனுக்கு!...

என் இதயத்திற்கு!...

இப்படித்தான், அந்தப் பெண், எழுதியிருந்தாள். என் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அத்தனை உருக்கத்தோடு அவள் என் நண்பனுக்கு எழுதியிருந்தாள். பட்ட மரம்கூடத் துளிர்த்துவிடும். ஆனால் என் நண்பனின் உள்ளம் மட்டும் துளிர்க்கவில்லை. அவனுக்கு ஆறுதல் சொல்லி ஒரு கடிதம்கூட எழுதவில்லை. ஒன்றின்பின் ஒன்றாக அவள் எழுதியிருக்கும் கடிதங்களே அதற்குச் சான்றாகும்.

எனக்குச் சிரிப்பு வந்தது. நான் சிரித்தேன்! அந்தக் கடிதத்தை எழுதியிருப்பவள் என் தங்கை— கமலம்!

தேனிலே தினைமா கலந்துவிட்டது. இனி அதை உண்ணும் நாளைத்தான் நான் கணக்கெடுக்க வேண்டும். என் நண்பனைத்தேடி நான் நடந்தேன்! ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் என் வாழைத் தோட்டம் — பூந்தோட்டம் — செந்நெல் வயல், இத்தனையும் சென்று பார்த்தேன். அவனைக் காணவில்லை.

என் உள்ளம் அலுத்துவிட்டது. நான் வீடுநோக்கி நடந்துகொண்டிருந்தேன். வழியில் ஒரு பட்ட மரத்தின் கீழ் கவலையே உருவாக என் நண்பன் குந்தியிருந்தான்.

வேதாந்தி!... அவன் திரும்பிப் பார்க்கவே இல்லை. மீண்டும் அழைத்தேன். அவன் திரும்பிப் பார்க்கவே இல்லை. நான் அவனருகில் சென்று கூப்பிட்டேன். திரும்பிப்பார்த்தான்.

"கனவு காண்கிறாயா?" என்று கேட்டேன்.

"நனைவைத்தான் கனவாக்கிக் கொண்டிருக்கிறேன் என்றான்.

"ஏன்" என்றேன் நான். அவன் பேசவில்லை. என்னோடு நடந்தான். நாங்களிருவரும் அவன் அறையை நோக்கி நடந்தோம்.

அறைக்கதவு மூடிக்கிடந்தது!

நான் ஆச்சரியப்பட்டேன் 'மூடுவதும் திறப்பதும் உன் உள்ளத்தைப்போலவே உன் வீட்டின் கதவுகளும் உள்ளன" என்றேன் அவனிடம்.

"மூடுவதும், திறப்பதும் ஒருவரின்உள்ளத்தைப் பொறுத்திருக்கிறது" என்றான் அவன்.

கதவைத் திறக்க முடியவில்லை. உட்புறம் தாழ்போட்டிருந்தது. யாரோ ஒருபெண்ணின் அழுகுரல்! நான் என் நண்பனைப்பார்த்தேன். அவன் இப்படிப் பலநாள், இந்த அழுகுரல் கேட்டுப் பழகியவன் போல் சலனமற்று நின்றுகொண்டிருந்தான்.

கதவைத் தட்டினேன்! கதவு திறந்தது, உள்ளே கமலம், என் தலை சுழன்றது, என் தங்கை கமலம்!...கண்ணீரில் மூழ்குவதா? என் தங்கையைப் பார்த்தேன். அழுது சிவந்திருந்த கண்களை என்னிடம் காட்டாமல் மறைப்பதற்கு அவள் முயன்றுகொண்டிருந்தாள்.

வெளிப்புறத்திலேயே நின்றுகொண்டிருந்த என் நண்பனை உள்ளே அழைத்துவந்தேன். என் தங்கையின் எதிரில் உட்காரவைத்தேன்.

அவன் என்னைப்பார்த்துப் பரிதாபமாக விழித்தான், ஏனென்று எனக்கே புரியவில்லை.

நான் அவனைக்கேட்டேன், "உனக்கு என் தங்கையைப் பிடிக்கவில்லையா, அவளிடம் அழகு இல்லையா? அறிவு, குணம், செல்வம், ஒழுங்கான நடத்தை இதில் என்ன குறை அவளிடம் கண்டாய்? ஏன் அவளை வெறுக்கிறாய்?"

என் கேள்விகளுக்கு அவன் விடையளிக்கவே இல்லை. ஊமை போல் பேசாமல் இருந்தான்.

மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று நான் நினைத்தேன்! என் தங்கையிடமும் சொன்னேன்.

என் தங்கை துள்ளிக்குதித்துக்கொண்டு ஓடினாள். என் உள்ளத்திலே மாளாத மகிழ்ச்சி; என்றும் காணாத பேரின்பம்.

திருமணத்திற்கு நாட்குறித்தேன். ஊர் என்னை எதிர்த்தது. நான் அதைக்கண்டு அஞ்சவில்லை. என் உள்ளம் என் முடிவு சரியென்று தீர்ப்பளித்துவிட்டது. மணக்கோலத்திலே வருங்காலக் கவியரசனையும், என் தங்கையையும் காணப்போகிறோம் என்ற பெருமை! என்கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

இன்னும் ஐந்து நாட்கள், மணமேடையில், என் தங்கையின் கையை, என் நண்பன்பற்றுவான். நான் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குவேன்.

மகிழ்ச்சி வெள்ளத்திலே நீந்தினேன். கற்பனைகள் உண்மையாகிவிட்டன. கனவு நனவாகிவிட்டது. என் நண்பனை அழைத்துவர அவன் அறைக்குப்போனேன், என் தங்கை இன்று அவனுக்காக, ஆசையோடு சமைத்துவைத்திருக்கிறாள். ஒரு பெண்ணிற்கு தன்கணவன் என்றவுடனே, தானே ஆசை பிறந்துவிடுகிறது.

என் நண்பனின் அறைக்கதவுகள் மூடிக்கிடந்தன. மூடியிருந்த கதவைத் திறந்தேன்! உள்ளே!... ஐயோ!... என் நண்பன் பிணமாகத் தொங்கிக்கொண்டிருந்தான்! நான் கனவில்கூட இதை எண்ணவில்லை. என்ன குறை கண்டான்! அவன் வாழ்வையே, என் வாழ்வு என்று எண்ணினேனே! அதுவா குறை? பேச்சற்ற ஊமையின் நிலையை நான் பெற்றேன். என் உடல் நடுங்கிற்று, கண்கள் கலங்கின. அவன் கால்களைப் பிடித்துக்கொண்டு கதறி அழுதேன்.

அவன் உடல் முழுவதையும் தடவிப்பார்த்தேன். என் சந்தேகம் உண்மையாயிற்று. அவன்சட்டைப் பையில் ஒரு கடிதம் இருந்தது. படித்தேன்...

நண்பா!

நீ வாழ் என்று சொன்னாய், நான் சாவை அணைத்துவிட்டேன். இப்படித்தான் என் உள்ளம் எண்ணிக்கொண்டிருக்கும், எங்கோ பிறந்தேன்? இதுவரை அதற்கு விடையளிக்க எனக்குத் தெரியாது. எங்கு வளர்ந்தேன்? அதற்கு விடை நான் சொல்லவேண்டியதில்லை. ஊரே சொல்லும். அனாதை ஒருவனுக்காக, உன் தங்கையைத் தாரமாக்க எண்ணினாயே, உன்னை என்னவென்று புகழ்வது, நான் உயிரோடு சில நாட்கள் இருந்திருந்தால்! உன்னைப் பற்றிஆயிரம் கவிதைகள் எழுதியிருப்பேன். உன் தங்கையைப் போல் அழகும், அறிவும் கொண்ட, ஒரு பெண்ணை நான் கண்டதில்லை. அவள் எனக்கு எழுதிய காதல் கடிதங்கள் என் பெட்டியில் இருக்குமென எண்ணுகிறேன். தேவையானால் பார். உன் தங்கை எத்தனையோ முறை என்னிடம் பேசித் தோல்வியடைந்தவள். அவளின் ஆசையை நான் பொசுக்கிவிட்டேன். அன்று, உன்னிடம் சொல்லவேண்டும் என்றுதான் என் உள்ளம் துடித்தது. பிறவியிலேயே என்னோடு பிறந்த வெட்கம் அதைத் தடுத்துவிட்டது. ஒரு பெண்ணின் முன்னால் அதை எப்படிச் சொல்ல முடியும்.

இன்னும் ஐந்து நாட்கள்!

உன் தங்கை, சாப்பிட மறுத்துவிடுவாள், தலைவாரிப் பொட்டிட மாட்டாள். அவள் நாளை எண்ணிக்கொண்டிருப்பது என் மனக்கண் முன்னே தெரிகிறது. நான் ஏமாற்றிவிட்டதை உன் தங்கை அறிந்தால், துடித்துப்போவாள் நீ அவளுக்கு ஆறுதல் சொல்லுவாய் என்றுதான் இதை எழுதுகிறேன்.

நண்பா, கண்ணீரோடு இதைச் சொல்லுகிறேன். உன் தங்கையை என் உள்ளம் காதலிக்கிறது. ஆனால்!... நான்...... நான்...... ஐயோ! ஆணுருவிலே இருக்கும் பெண்... "அலி!!" எப்படியென்னால் வாழமுடியும்? உன் தங்கையின் வாழ்வைப்பாழ்படுத்த நான் விரும்பவில்லை. எனக்கு அறிவும் அழகும் தந்த இயற்கை ஆண்மையைத் தரவில்லை. இது என் குற்றமில்லை. "இது இயற்கையின் சதி" "இயற்கையின் சதி"

— அனாதை, வேதாந்தி.

கடிதத்தை, எடுத்துக்கொண்டு என் வீடு நோக்கி, என் கால்கள் ஓடின, என் நெஞ்சம் அழுதது; அதன் ஒலி, "இயற்கையின் சதி" — "இயற்கையின் சதி" என்று சொல்லுவதுபோல் இடைவிடாமல் கதறிக்கொண்டிருந்தது.

காலக்கண்ணோட்டம்:

# இரஷ்யா....(1)

மூலம்: ஜான் பேக்கர் ஒயிட்

தமிழில்: "அன்பு"

இன்று உலகோர் கண்களனைத்தும் ஏதோ ஒரு வகையில் இரஷ்யாவையே நோக்கிக்கொண்டிருக்கின்றன. இரஷ்யாவின் 'இரும்புத் திரை' அகற்றப்பட்டுவிட்டது என்பது பெரும்பாலான மற்றைய நாடுகளின் எண்ணம். அதே கருத்தைக் கொண்டுதான் 'தங்கத் திரை' என்ற தலைப்பில் இதே ஏட்டில் — ஆசிரியர் அவர்கள் நான்காண்டுகளுக்கு முன்பு — குருஷ்சேவ், புல்கானினோடு வந்தபோது எழுதிக்காட்டினார்கள். பழைய இரும்புத் திரை, தங்கத்திரையானது குருஷ்சேவின் ஆட்சி தோன்றிய அன்றிலிருந்துதான் என்பது மறுத்துரைக்க முடியாத உண்மை.

இந்த ஆண்டு மார்ச்சுத் திங்கள் 5-ம் நாள், ஒரு காலத்தில் சோவியத் இரஷ்யாவின் தூண்போல் கருதப்பட்ட ஜோசப் ஸ்டாலினினுடைய 7-வது இறப்பு ஆண்டைக் குறிக்கும். அப்போது, இரஷ்யாவின் வானொலியும் பத்திரிகைகளும் ஸ்டாலின் இறந்த தினத்தை துக்கநாளாகக் கொள்ளாமலிருக்கும் அல்லது ஸ்டாலினின் ஆட்சியில் நடந்த குறைபாடுகளைப்பற்றிப் பிரச்சாரம் செய்ய ஒரு சந்தர்ப்பமாக எடுத்துக் கொள்ளும். ஜோசப் ஸ்டாலின் இறந்த பிறகு, சோவியத் இரஷ்யாவின் அரசாங்க சரித்திராசிரியர்களாலேயே தொடர்புவைத்துக் கொள்ள முடியாத அளவுக்கு அங்கு குறிப்புக்கூறக் கூடிய அளவில் பல அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

உதாரணமாக, அதுவரையில் அச்சுறுத்தி ஆட்சிசெய்து வந்த முறை அடியோடு மாறியது; கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களாலேயே வெறுக்கப்பட்ட பெரியாவின் துன்பம் நிறைந்த கொடுங்கோன்மை ஆட்சிமுறை குருஷ்சேவ் ஆட்சிக்கு வந்ததும் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது.

இன்று, இரஷ்யர்கள் இரவிலும் எந்தவிதமான அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக்கப்படுவதில்லை. வெளிவிவகார புலன் விசாரணைக் குழுவின் அளவு அதிகரிக்கப்பட்டிருப்பதைத் தவிர, கடந்த ஏழு ஆண்டுகளாக, சோவியத் பாதுகாப்புத் துறையின் அதிகாரங்கள் குறிப்பிடக் கூடிய அளவில் குறைக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில்கூட குருஷ்சேவ், உள்நாட்டு அமைச்சரவை என்ற ஒரு துறையையே நீக்கிவிட்டார். அதில், ஒரு காலத்தில் "இரஷ்யாவின் ஆறு பேர்களில்" ஒருவராயிருந்தவரும், "புடாபெஸ்ட் கொலையாளி" என்று அழைக்கப்பட்டவரும் ஆன என். டி. டடோரோவ் என்பவரும் ஒருவர். இன்று அவர், ஒரு மறந்த உருவமாக மாறிவிட்டார்.

அரசியல் அதிகாரத்தை மறுத்தால் என்ன அடைய நேரும் என்பதை இரஷ்யர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் வழக்கோ, விசாரணையோ இல்லாமல் அரசாங்கம் யாருக்கும் சிறைத் தண்டனை அளிக்காது என்பதையும் இப்போது தெரிந்துவைத்திருக்கிறார்கள். குற்றங்களும், அதிகார நெறியில் வழுவல்களும் புரியும் உயர்தர அலுவலர்களைத் தண்டிக்கும் வகையில் ஸ்டாலினுக்கும், குருஷ்சேவுக்கும் நிறைய வேறுபாடு உண்டு. இப்போதெல்லாம் குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிப்பதோ, கட்டாய உழைப்புக்கு அனுப்புவதோ கிடையாது. மாறாக, எங்கோ உள்ள சிறு சிறு இடங்களுக்கு யந்தமான் வேலைகளைக் கொடுத்து அனுப்பப்படுகிறார்கள். இத்தகைய 'தண்டனை' தான் மாலன்காவ், ஷெப்பிலாவ், மாலடோவ் ஆகியோருக்குக் கிடைத்தது. முக்கியமானவர்கள் வரிசையில் மூன்றாவது அங்கம் வகித்து வந்த ஏ. கிரிசென்கோ என்பவரும் சமீபத்தில் சுப்ரீம் சோவியத் என்ற அமைப்பிலிருந்து ஒரு கட்சிக் கிளையின் சாதாரண காரியதரிசியாக மாற்றப்பட்டார்.

> "சோவியத் யூனியன் — குருஷ்சேவின் ஆட்சியில்" என்ற தலைப்பில் தனக்குப் பட்ட சில கருத்துக்களை விவரிக்கிறார் கீழ்வரும் கட்டுரையின் மூல ஆசிரியர். குருஷ்சேவின் ஆட்சியில் சோவியத் இரஷ்யா பல துறைகளிலும் ஜனநாயக முறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பது ஆசிரியரின் எண்ணம்.
>
> ஆனால், இரஷ்யா இன்னும் தனது இரும்புத் திரையை அகற்றிக்கொள்ளவே இல்லை என்ற ஒரு கருத்தும் ஒரு சிலரிடையே இருந்து வருகிறது. கீழ்வரும் கட்டுரைக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு அமெரிக்க எழுத்தாளருடைய மற்றொரு கட்டுரையை நீங்கள் அடுத்த இதழில் காணலாம்."

இதுவரையில் இங்கிலாந்தில் இரஷ்யாவின் தூதுவராக இருந்து வந்த ஜோசப்மாலிக் என்பவரைத் திரும்பவும் இரஷ்யாவுக்கே அழைத்துக்கொண்டதை இரஷ்யாவின் பாதையில் ஏற்பட்டிருக்கும் ஒருவித திருப்பமாகத்தான் கூறவேண்டியிருக்கிறது. மற்ற எந்த ஒரு இரஷ்ய தூதுவரையும் போலல்லாமல் மாலிக், இங்கிலாந்தையும் அதன் பலத்தையும் மிக நன்றாக புரிந்துவைத்திருந்ததோடு அதைப் பற்றி எங்கும் சொல்ல மறுப்பவராகவும் இல்லாமலிருந்தார். இவ்வாறு இங்கிலாந்தைத் தெளிவோடு அறிந்த ஒருவர் நம் அருகிலேயே இருக்கவேண்டும். இருப்பது அவசியம் என்ற குருஷ்சேவின் விருப்பம்தான் அவரை மீண்டும் இரஷ்யாவுக்கு அழைத்திருக்கிறது என்று எண்ண இடமிருக்கிறது.

பொதுவுடைமை இல்லாத நாடுகளின் கொள்கைகளைப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணம் ஸ்டாலினிடத்தில் சிறிதுகூட இல்லை. ஆனால் குருஷ்சேவ் அவரது அமெரிக்கப் பயணத்திலிருந்து கம்யூனிசம் அல்லாத மற்றைய நாடுகளைப்பற்றி மிகவும் விருப்பத்தோடும் சிரத்தையோடும் கவனித்து வருகிறார். செஞ்சீனாவின் எல்லைப் பேராசையைப்பற்றி அவரது துணைவர்களிடத்தில் வெளிப்படையாகக் கூறுவதற்கு குருஷ்சேவ் சிறிதும் தயங்குவது கிடையாது. மேலும் சமீபத்தில், சோவியத் வெளி விவகார அலுவலகத்தின் சீனப்பகுதியை இன்னும் விரிவுபடுத்தியிருக்கிறார் குருஷ்சேவ்!

ஸ்டாலினது ஆட்சியில் இராணுவ அதிகாரிகள், அலுவல் நேரத்திலும் சர், அல்லது அலுவல் இல்லாத சாதாரண நேரத்திலும் சரி, எப்போதும் ஒரேவித இராணுவ உடையில்தான இருக்க வேண்டும். ஆனால் இப்போது இரஷ்யாவுக்குச் செல்லும் யாரும், இராணுவ அதிகாரிகள் வேலையில்லாத நேரங்களில் மேற்கத்திய

செல்வதை மிகச் சாதாரணமாகக் காணலாம்!

விண் வெளிப்பயணத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தைக் கருதி மட்டுமே சமீபத்தில் குருஷ்சேவ் படைக்குறைப்புச் செய்யவில்லை. மனிதர்கள் பற்றுக்குறையால், பயிரிடப்படாமல் கிடந்த ஏராளமான நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதற்கும் கனரகத் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்பட்ட அதிகமான மனித சக்தியைப் பெறுவதற்காகவும் தான் சமீபத்தில் குருஷ்சேவ் படைக் குறைப்பைச் செய்தார். இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் ஸ்டாலின் ஆட்சியில் இருந்திருந்தால் அவர், இரக்கமில்லாத அதிகார பலத்தைத்தான் உபயோகப்படுத்தியிருப்பார். ஆனல் குருஷ்சேவ், படையிலிருந்து விலக்கப்பட்டவர்களைத் திட்டவேலைகளில் ஈடுபடுத்துவதற்காக அவர்களுக்கு ஊக்கமும், புது இடங்களில் வாழ்வு தொடங்குவதற்கான பண உதவியும் அளித்திருக்கிறர்.

குற்றவாளிகளைத் துன்பப்படுத்திக் கட்டாயவேலைகள் வாங்குமிடங்களை வெகுவாகக் குறைத்துவர வேண்டும் என்பது குருஷ்சேவ் ஆட்சியின் ஒரு நீண்டகாலத் திட்டம். பெரும் குற்றங்களையும் அரசாங்கத்துக்குக் கேடுகள் விளைவித்தலையும் தவிர மற்றைய சாதாரண குற்றங்களெல்லாம் தொழிற்சாலைகளுக்குள்ளேயே இருக்கும் "தொழிலாளர் நீதிமன்றம்" என்ற அமைப்பிலேயே விசாரிக்கப்படுகிறது.

இதுபோன்ற பல மாற்றங்களெல்லாம் மக்களுக்கு நல்ல வகையில் பலனளித்திருக்கிறது. ஸ்டாலின் ஆட்சியின் கிழ் வாழ்ந்ததைப்போலல்லாமல் இப்போது மக்கள் மிகவும் மகிழ்ச்சியோடு வாழ்கிறர்கள்; நன்ருக உடுக்கிறர்கள்; மன நிறைவோடு உண்கிறர்கள்; மிகக் குறைந்த அளவு நேரமே உழைக்கிறர்கள். இயந்திர சக்தி அவர்களது மனித சக்தியின் தேவையை வெகுவாகக் குறைத்திருக்கிறது. ஏழு ஆண்டுகளுக்கு முன், 'ஏழுமணிநேர வேலைத் திட்டம்' என்பதை ஒரு வேடிக்கையாகவும் விநோதமாகவும் எண்ணினர்கள் மக்கள். இன்ருே, அத்திட்டம் மிகவிரைவில் நிறைவேறப் போகிறது என்பதை எண்ணி இன்புறுகிறர்கள்.

தல் இன்னும் இரஷ்யாவில் ஒரு பெரும் குற்றமாகத்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனல் நாட்டின் பொருளாதார குறைபாடுகளைப்பற்றிக்குறைகூற ஒவ்வொருவரும் அனுமதிக்கப்பட்டிருக்கிறர்கள். அதேபோல இப்போதெல்லாம் இரஷ்யர்கள் அயல்நாட்டினரோடு வெளிப்படையாகப் பேசவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறர்கள்.

முதலாளித்துவக் கொள்கைகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று ஸ்டாலினல் கருதப்பட்டு வந்த சில கோட்பாடுகளையெல்லாம் அடியோடு ஒதுக்கிவிட்டு, அதன்மூலம் தொழில் துறையில் இரஷ்யாவை எண்ணமுடியாத அளவுக்கு முன்னுக்கு கொண்டு வந்திருக்கிறர்குருஷ்சேவ். மேலும், ஸ்டாலினது காலத்திலிருந்ததைப்போல் இல்லாமல் இப்போது தொழில் துறை உற்பத்தியைப்பற்றிய புள்ளிவிவரங்கள் உண்மையானவைகளாகவும் சரியானவைகளாகவும் இருக்கின்றன! ஸ்டாலினது ஆட்சியில் இருந்துவந்ததற்கு மாருக இப்போது, மக்களின் உடனடித் தேவைகளுக்கான பொருள்கள் தரத்தில் உயர்ந்தவையாக உள்ளன. இப்போது மக்கள் குறைந்த அளவு பொருள்களில் நிறைந்த அளவு சேவைகளைப் பூர்த்திசெய்துகொள்கின்றனர்."

களுக்குமிடையே இன்று தொங்குவது இரும்புத்திரை என்பதைவிட, 'பார்க்கக்கூடிய துளைகளையுடைய ஒரு இரும்புத்திரை' என்பதே பொருந்தும். தனது எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக டிராக்டரை (உழும் இயந்திரம்) உபயோகப்படுத்தும் ஒரு மனிதனுக்கும், டாங்கி (இராணுவப் போரில் உபயோகிப்பது)யை உபயோகப்படுத்தும் மனிதனுக்கும் உள்ள வேறுபாடு எவ்வளவோ அந்த அளவு வேறுபாடு உடையவர்கள் குருஷ்சேவும் ஸ்டாலினும்! (ஸ்டாலின் ஆக்கிரமிப்பு எண்ணத்தோடு டாங்கியை உபயோகப்படுத்தினர்; குருஷ்சேவ் நாட்டின் உணவு உற்பத்தி எண்ணத்தோடு டிராக்டரை உபயோகப்படுத்துகிறர் என்பது மூல ஆசிரியரின் கருத்து.)

பெரும்படைகளைக்கொண்டு இரத்தப் புரட்சியால் அமைக்கப்பட்ட ஒரு உலக கம்யூனிச அரசியல் ஸ்டாலின் தன் வாழ்வில் கண்ட கனவு! பொருளாதாரத் துறையில் மற்றநாடுகளை வெற்றிகொண்டு முன்னேற வேண்டும் என்பது இப்போது குருஷ்சேவ் காணும் கனவு!

இந்த உண்மையை ஒப்புக்கொள்ள மறுப்பது ஜனநாயகத்துக்கே மிகவும் கேடுவிளைவிப்பதாக முடியும்! ✱



## இனிக்கும் செய்தி

வாசக அன்பர்களும், விற்பனையாளர்களும் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் **"தம்பிக்கு, அண்ணன்"** எழுதுவது, சித்திரை திங்களில் இருந்து தொடங்கப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.

பொறுப்பாளர்
திராவிட நாடு

காஞ்சிபுரம், 95 திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில